ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அ

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1–12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு கு. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு கு. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விசிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஆவணிமீ 14உ (30–8—1931) | மலர் 18

பொது ஜனங்களுக்கு ஒரு விண்ணப்பம்.

சென்னை 18—7—31

எனக்கு கால்விரல்கள் ரணமாகி, விக்கம் வலியோடு பாதத்தில் பெரிய குழிப்புண்கள் உண்டாகி அழுகி நீர் வடிந்துகொண்டிருந்தது. இரண்டுவருஷமாகப் பலவகை வைத்தியங்கள் செய்தும் கோய்நிறுதும் குணமில்லாமல் என் உயிரையே வெறுத்துக்கொண்டிருந்தேன். கடைசியில் சென்னை தமிழ் வைத்தியசாலைத்தலைவரும், கார்ப்பொரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்களின் அருமையான மருந்தால் ரணங்களும், குழிப்புண்களும் ஆறி குஷ்டநோய் நீங்கி நலமடைந்தேன். என்போன்ற நோயாளர் போலி மருந்துகளால் மோசம்போகாமல் பண்டிட் ஆனந்தம் அவர்களின் மருந்தால் நோய்நீங்கி நலமடையக் கோருகிறேன்.

R. ராதாகிருஷ்ணன் 1/75 திருப்பள்ளித்தெரு சென்னை.

குஷ்டநோய்க்கு ஓர் அற்புத மருந்து.

உடம்பில் தோல்நிறம்மாறி, தோல்தடித்தல், மதமதப்பு, திமிர், தினவு, இரணம் முதலிய உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல், முதலிய குஷ்டநோய்களுக்கு ஓர் சிறந்த மருந்து. இது தாம்பிரம், வங்கம், முதலிய உலோகங்களின் களிம்புள்ள செந்தூரபஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றுஞ செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40 நாள் மருந்து ரூ. 12—0—0. 20 நாள் மருந்து ரூ. 7—0—0.

தனி விலாசம்:— "மருத்துவன்" சென்னை. டெலிபோன் நெ. 2584

ரா. ஜெ. ராஜசேகரன்.

10—7—31.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல்தடிப்பு, நிறம்மாற்றம், தினவு, ரணம், முதலியவைகளோடு கூடிய குஷ்டநோய்க்கு சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச்சாப்பிட்டு கொடியநோய் அறவேநீங்கி உலிவும் அழகும் அடைந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்

61. பட்டவேட்டம்மன் கோயில் வீதி, புரசவாக்கம் சென்னை. — U. D. சுந்தரம்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலை,
221. தங்கசாலை வீதி, சென்னை.

வேளிவந்து விட்டது! வாங்கத்தவாதீர்கள்!!

மு ந் து ங் க ள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம் பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜன ங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஹு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., (வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள் ளூர்) அவாகளால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

இனம்! இனம்!! இனம்!!!
முந்துங்கள்! 1000 முந்துங்கள்!!

மக்களால் வாசிக்கப்பட்ட

ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்கள்

படித்து எளிதில் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொள் ளுங்கள். (முதல் பதிப்பில் சொற்ப கோர்ஸ்கள் தான் கைவசம்)

தமிழ் வாசிக்க தெரிந்த யாவரும் 1.7 கோர்ஸ்களடங் கிய பாடங்களை தபால் மூலம் 30 நாட்களில் வாசித்துக் கொள்ளலாம். வியாபாரிகள், தொழிலாளிகள், ஆபீஸ் சிப்பந்திகள், கிராம உபாத்திமார்கள், பாடசாலை மாணவர் களுக்கு அதிக பிரயோஜமானது. ஏழை மக்களுக்கென் றே எழுதப்பட்டது. பீஸ் ரூ. 5—0—0 புதுவாழ்க்கை தீஜீவரஹஸ்ய புஸ்தகங்கள் சொற்ப காலம்வரை இனம்.

அட்மிஷன் பாரம்

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்

இன்ஸ்டிடியூட் ஆறுமுகநேரி S. I. R.

ஐயா,

இத்துடன் ரூ. 5. அனுப்புகிறேன். என்னை ஓர் மா ணவராகச் சேர்த்து ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்கள் பூராவையும், இனம் புஸ்தகங்களோடு அனுப்பவும் எனக்கு அனுப்பப்படும் பாடங்களை பிரயாசைப்பட்டு வாசித்து வருவேனாகவும்.

தெளிவான விலாசம்.....

கையெழுத்து

N. B. அயல்நாட்டு மக்கள் காலதாமதமாகாதபடி ரிஜிஸ்டர் மூலம் தொகை அனுப்பவும்.

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண் டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொ டுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தேன் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்ல ருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணை 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணை ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய் ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முத லியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் சிலவு, கட வுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்ப தோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட் டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணை 6, 7 அணை ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனு ப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0

விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—

திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்.

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள் ளுக்கும், வெளியிலும் உபயோ கிக்க நிமிஷகணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்
மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

விருதுநகர் மகாநாடு.

(ஓர் மதிப்புரை)

(தோழர் ம. சிங்காரவேலு B A. B L.,)

இந்த வருஷம் விருதுநகர், சில விஷயங்களில் சிறப்புற்று விளங்கக்காண்கின்றோம். சுயமரியாதைக் கட்சியார் இவ்விடத்தில் மூன்று பிரபல கூட்டங்களைக்கூட்டி, பற்பல தீர்மானங்களைச் செய்தனர். இந்த வருஷம் இந்தக் கட்சியார்செய்துள்ள தீர்மானங்கள், நமது நாடு கணிசிக்கத்தக்கது. இவர்கள் செய்துள்ள தீர்மானங்கள், "காலத்தோடு ஒதவாழ்" என்ற நவீனக்கொள்கைகளுக்கு ஊட்டி, அவர்கள் சோக்கை அலைகளின் கற்பிதங்களை பாமர சனின்படி நடந்தேறிய விஷயம். நன் அஞ்ஞையில் வற்புறுத்திபது மிக மக்கள் வுணர்ந்தார்களாயின் தெய்வ குமதிக்கத்தக்கதே. இதற்காக சமூ வு சிறப்புடையதாகும். பலகோடி ங்கள் எங்கே! கோவில்கள் எங்கே! தாயத் தட்சியில் சேர்ந்தவர்களாகிய தொழிலாளரும் விருஷிகளும் பசியும், குருமார்கள் எங்கே! பிராமணர்கள் நம், இத்தத்தீர்மானங்களில் சப்பத் பட்டினியுமாய்கிடந்து அதியாமையில் எங்கே! புரோகிதர்கள் எங்கே! இந்தி தப்பட்ட பெரியோரையும், சிறியோ ஆழ்ந்து கிடக்க, இந்த அகோர கிலை சமூகப் பிசாசுகளை உலகவிட்டு ரையும் மனப்பூர்வமாக வாழ்த்துகின் மைக்கண்டிக்காதனப்படாமல் மதமும் வோட்டக் கங்கணங்கட்டிக் கொண் றோம். இது முதல் இடங்களை மந்திரசல்லியங்களும். கோவிலும் குள டிருக்கும் சுயமரியாதைச் சங்கத்தா வேண்டுமென்று இந்தத்தீர்மானங்களை ங்களும், ஜாதியும், பங்கியும் இருந் ரின் ஆற்றலே, ஆற்றல்!! விசாலப்படுத்தவும் நமமுடன் கூட தென்ன? போயென்ன? மதப்பித்து வாழ்ந்துவரும் கோடானகோடி பா பிடித்து, உங்கள் உழைப்பைக்கொள் மர மக்கள் இனித வாழுமாறு ளுகின்றவர்களுக்கு தேசமென்னத் விடாமுயற்சி செய்யுமாறு வேண்டிக் திற்கு? தேச க்தி என்னத்திற்கு? கொள்ளுகின்றோம். இவைகளெல்லாம் பகல் வேஷமென் றறிக.

நமது தமிழ் நாட்டுச் சுயமரியாதைச் சங்கப் பெரியோர்களுக்கு ஒன்று தெரிவிக்கவேண்டியவனாய் இருக்கின்றேன். என்னை மகாநாட்டிற்கு வரும் படி அழைத்ததற்காக, மிக்க வந்தனம் புரிகின்றேன். ஆனால், திரோகம் இடங்கொடாமையால் நமது தோழர் ஈவெ இராமசாதனிடம் வாராமுடியாத சந்தர்ப்பத்தைப்பற்றி தெரிவித்துக் ளேன் இருந்தாலும் வரவேண்டு மென்ற எண்ணம் மேற்கொண்டிருக் கது. இதருவாயில் நமது "குடி அரசில்" மகாநாடு கூடும் வைபவ களைக் கண்டேன். கொடியும் சொ டிகளைகளும், மாவிலையும், வெண் சாமரைகளும், யானையும் குதிரை யும், அம்பாரியும், மற்ற வைபவங்க ளுடன் நடக்கப்போகுதைக் கண்ட தும், எண்மனம் நடுக்கமுற்றது. இந்த வைபவங்கள், முதலாளி வர்க்கத்தி னர்களாகிய காங்கிரஸ் கூட்டத்தாரு க்கு அதிகதாகையாலும், இவ்வித படாடோப ஆடம்பரங்களில் கலந்து கொள்ள முடியாதலையும் என்னுடை யபயத்தை தோழர் இராமசாதனிடம் தெரிவித்துகொண்டேன்.

மகாநாட்டு வைபவங்கள் எப்படி இருந்த போதிலும் ஆங்கு செய்த ள்ள தீர்மானங்கள் நமது தேச முன் னேற்றத்திற்கு ஏற்றவைகென்றே எண்ணவேண்டி வருகிறது.

முதலில் வாலிபர் மகாநாடு கூடி க்கத்தக்கது. நமது தமிழ் நாட்டு வாலிபர்களுக்கு தோழர் சோமசுந்தி ரம் அவர்கள் தெரிவித்த விஷயங்கள் பிரின்ஸ் கொரோபாட்கின் (*Prince Krcpotkin*) அவர் தேசத்து வாலிபர் களுக்குச் சொன்ன விசேஷத்தைக் கியாபகம் மூட்டுகிறது. நமது தோ ழர் இனிவரும் வாலிப உலகிற்கு வழிகாட்டியுள்ளார். கண்மைச்சுற்றி வாழும் தொழிலாளருக்கும் விவசாயி களுக்கும் உழைப்பதைவிட உயர்ந்த உழைப்பு உலகில் எங்குளது? ஆத லின் இந்த சாரத்தை நமது சிறுவர் யரை உற்சாகமென்பது உலகைச் சுற்றிவர பிரட்டைபார்ட்டுக் கட்டை வண்டியைக்கொண்டு அன்னூர் யாத்திரை போகச்செய்யலாமென்பதை யொக்கும்! கைராட்டினங்களெல்லாம் அம்பு வில்லுடன் நமது முன்னோர் கள் போனவிடம் சென்று மறைந் தன. பார்க்கவேண்டுமானால் பூர்வ காட்சிசாலையில்தான் பார்க்க முடி யும்.

ஆக, மூன்றுவது சுயமரியாதை கூட்டத்தில் முடிவுசெய்த பிரச்சினை களை இனி விசாலப்படுத்தியும், விவ ரப்படுத்தியும், தமிழ் மக்களுக்குள்ள அறியாமையும், மூட பக்தியும் நீக்கு மாறு உழைப்பார்களென்றே நம்புகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நமது சுயமரியாதைத் தோழர்களுக்கு ஒன்று குறிப்பிடக்கடமைப்பட்டுள்ளோம்.. அதாவது,

அறிவுக்காதாரமாகிய விடையங்களைக் குறித்து நமது சுயமரியாதைக் காரர் எவ்வளவு ஊக்கத்துடன்உழைத்து வருகின்றார்களோ அவ்வளவு மனவிசாலத்துடன் சிவ ஆதாரம், பொருளாதாரம் முதலிய முக்கிய விடையங்களைக் குறித்தும் பாடுபட வேண்டுமாறு நமது தோழர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம். "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்றதையும் கவனித்தல் வேண்டும். அறிவை அந்தகார இருளிலிருந்து நீக்குவதைப் போல், உயிரையும் தாக்கொணப்பசிப்பிணியிலிருந்து நீக்க வேண்டும். உணவு இன்றி அறிவு விளங்காதாதையால் உணவே உயிருக்கும் அறிவுக்கும் ஆதாரம். ஆதலின் 35 கோடி மக்கள் இனித உண்டு, உடுத்தி, வாழ்வதற்கு வேண்டிய ஆதாரங்களை சுயமரியாதைப் பெரியோர் கண்டெடுத்து அளிப்பார்களென நம்புகின்றோம்.

இந்து முஸ்லீம் ஆதிதிராவிட மகாநாடு கூட்ட ஆலோசனைக் கூட்டம் முத்துப்பேட்டை.

14—8—31 மாலை 3-மணிக்கு முத்துப்பேட்டை முகம்மதிய இளைஞர் சங்கக் கட்டிடத்தில் திருமிகு மௌ. க. முகைதீன் பிச்சை மரைக்காயர் அவர்கள் தலைமையில் 'இந்துமுஸ்லீம் ஆதி திராவிட மகாநாடு' என்னும் பெயரால் ஒரு மகாநாடு வருகிற செப்டம்பர் மாதம் மூன்றும் வாரத்தில் கூட்டுவதென முடிவுசெய்து தீர்மானிக்கப்பட்டதுடன் ஒரு செல்வாக்குள்ள வரவேற்புக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

ஒரு நிருபர்

விவாஹ விடுதலை.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

[சென்ற வாரத்தொடர்ச்சி]

இத்தகையவிடை நாம் மட்டும் பெண்மக்களின் சார்பாகக்கூறுவதன்று. எந்தப் பெண்மக்களே விவாஹமும் அதற்கின்றியமையாததாகிய சுதந்திரமும், பாதிக்குமோ, அந்தப்பெண்மக்களே நமது இந்தியாவில் இதுவரைப்பல் வேறு மகாநாடுகளிற் கூடி பெண்கள் சமூகத்திற்கு விவாஹ விடுதலை மசோதா இன்றியமையாதது எனத் தீர்மானித்துள்ளார்கள். ஐக்கிய மாகாணத்தைச்சார்ந்த காசியில்கூடிய கூட்டமும் இன்னும் ஏறக்குறைய ஒவ்வொருமாகாணத்திலும் கூடிய பெண்கள் கூட்டமும் விவாஹரத்து வேண்டுமென்றேதான் கூறிவந்துள்ளது. இவற்றில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது கடந்த ஆண்டில் சென்னையிற்கூடிய மாகாண மாதர் மகாநாடும் அதில் திருமதி பட்டவர்த்தன அம்மாள் அவர்கள் பிரேரேபித்து பல எதிர்ப்புகளினிடையே நிறைவேற்றப்பட்ட தீர்மானமுமேயாகும். அதுகூறியதாவது;-

'இம்மகாநாடு இப்பொழுது நம் சமூகத்தில் வழங்கிவரும் ஆண்களுக்குவேறுபெண்களுக்கு வேறு என்றிருக்கும் இருவகைச்சட்டத்தையும் ஒழுக்கத்தையும் முழுதும் கண்டிப்பதுடன் ஆண்கள் பெண்கள் இருபாலார்க்கும் விவாஹரத்து செய்துகொள்ளச்சம உரிமை தரப்படவேண்டும்'

இதுபோன்றதொரு தீர்மானம் நம் சமூகத்தில் வீழ்ந்ததொரு வெடிகுண்டுக்குச் சமமாயிற்று. இது நம் தமிழ் நாட்டை ஒரு ஆட்டு ஆட்டி விட்டது. பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழை, பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், ஹிந்து, ஹிந்துவல்லாதார் ஆகிய பலதரப்பட்ட மக்களும் தங்களுக்குள் இயல்பாகவேயுள்ள பல்வேறுபட்ட வேற்றுமைகளையும் பேதங்களையும் மறந்து, இதில்மட்டும் ஒருமனப்பட்டு இத்தீர்மானத்தையும் இதை நிறைவேற்றியதற்குக்கருவியாயிருந்த பெண்மணிகளையும் கண்டித்து நொந்தனர். இன்னும் மிக்க ஆச்சரியகரமான ஒருவிசேஷம் இதில் என்னவென்றால் நாள் தோறும் தம்முள் சச்சரவிட்டு வேறுபடும் நாலாவிதமான பலபத்திரிகைகளும் (ஹிந்து, ஜஸ்டிஸ், மெயில் முதலியவைகளும்) தம் வாழ்நாளில் ஒருமுறை ஒருமனப்பட்டு 'ஒழுக்கத்தைக்குலைக்க வந்ததும் ஊரைக்கெடுக்க வந்ததும்' ஆகும் இத்தீர்மானம் என எகோபித்துக் கண்டித்தன. எஞ்சிநின்ற தமிழ் பத்திரிகைகள் தம் வழக்கம்போல் ஒத்துக்குமத்தளம்போட்டு ஊளையிட்டு ஓய்ந்தன. இத்தகைமான ஒருகாக்ஷி ஒருபெறும் அறிகுறியையுடையதாகும். என்னவென்றால் (தமது கணவர்களின் ஆணைக்குட்பட்டு இத்தீர்மானத்துக்கு மறுப்பு எழுதிய ஒரிரண்டு பெண்மக்கள் தவிர) இத்தத் தீர்மானத்தை யதவே கண்டித்தவர்கள் அனைவரும் ஆண்மக்களே. இதைச்சற்று நிதானித்துக்கவனிப்பின் மனிதவியற்கை தேசத்தைப் பொறுத்தும் ஜாதி, மதம், அல்லது பால் இவைகளைப்பொறுத்தும் ஒரே மாதிரியானது என்பது நன்குவிளங்கும். தற்காலத்தில் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் இருந்துவரும் தொடர்பைச்சற்று நோக்குங்கள். ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் எத்தனை கருத்பேதங்களும் சண்டை சச்சரவுகளும் இருந்தபோதிலும் (உண்மையான ஒரு சிலரைத்தவிற) அவர்கள் அனைவரும், தம்அடிமை தேசங்களுள் எவையேனும் தலையெடுக்க முயன்று தன் சுதந்திரத்தைக் கேட்குமேல் எவ்வாறு ஒன்று சேர்ந்து அது தமது பொதுவான ஆதிக்கத்தைப்பாதிக்காமல் இருக்குமாறு கண்டிக்கவும் அதை எதிர்க்கவும் முன் வருகின்றார்களோ அவ்வாறே இப்பொழுது ஆண் மக்கள் அனைவரும் பெண்பாலார் சுதந்திரம் பெற்றுவிடின் தமது ஆதிக்கமும் அதிகாரமும் போய்விடுமேயென்றஞ்சி ஒன்று சேர்ந்து எதிர்க்க முனைந்துள்ளார்கள். இத்தகைய நடத்தை ஆண்மக்களது அதிகாரக்காமத்தையும் அவர்களது தற்காப்புத் தந்திரத்தையும் அன்றி மற்றெதைக்காட்டுகின்றது? ஒருக்காலும் அது ஆண்மக்களுக்கு ஒழுக்கத்தின் பாற்பட்ட பிரிவு என்பதைக்காட்டவே காட்டாது.

'பெண்கள் எப்போதும் இதுவரையில்ஆண்களின் பாதுகாப்பிலும்,போஷகத்திலும் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு அறிவும் அனுபவமும் ஒழுக்கத்தைக்காப்பாற்றும்முறையும் தெரியாது. ஆதையால் நாங்கள அவர்கள் தம்மையறியாமலே முறைதப்பி விவாஹ விடுதலை வேண்டும் என விரும்புதலைத்''தடைசெய்கின்றோம்'' என்று சிலர் கூறமுன்வரலாம். அவ்வாறும் வந்துள்ளார்கள். ஆனால் இதற்கு இரண்டு மறுப்புகள் உண்டு. முதலாவதாக எந்த ஆண் மகனுமது நம் தேசத்திலிருக்கும் பெண் பாலார் அவ்வளவு பேரும் ஒழுக்க உணர்ச்சியும் ஒழுக்க முறையும் அற்றவர்கள் என்று கூறமுன்வரமுடியுமா? வென்று கேட்கின்றோம் ஒருக்காலும் முடியாது. எனெனின் இதுவரைக்கும் இந்த உலகத்திலேயோ அல்லது நம் நாட்டிலோ 'ஒழுக்கம்' என்பது ஒன்று தலைகாட்டிக்கொண்டு வந்திருக்குமாஞல் அது பெண் மக்களாலும் அவர்கள் தம் உயிர்வும் உண்மையும் தாங்கிய வாழ்வினாலும் என்பதை அறிவு, அனுபவம், இம்மியும் கொண்டுள்ள எவனும் மறுக்கவே முடியாது. அது ஒருபுறமிருக்க, அப்படியே நம் பெண் மக்கள் ஒழுக்க உணர்ச்சியற்றவர்களாய் இருப்பதாக வைத்துக்கொண்டு பேசுவோம். அதிலிருந்து என்ன பெறக்கிடக்கின்றது? பல்லாயிரம் ஆண்டுளாக ஆண் மக்கள் [ஒழுக்க வுயரவிலும்உணர்ச்சியிலும்தலைசிறந்தவர்கள் என்று தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளும் ஆண் மக்கள்] தங்களது ஆதரவின் கீழும், ஆட்சியின் கீழும் பெண் மக்கள் அத்துணை பேரையும் அடக்கிவைத்துவந்திருக்கல் வழியில் பழக்கியும் வந்துள்ளோம் என்றும கூறிக் கொள்ளுவார்கள். அப்படியவர்கள் கூறுவதும் மிகவும் உண்மையே. ஆனால் நாம் கேட்பது என்னவென்றால் இவ்வளவு காலம் இத்தகைய வொழுக்கத்திற்குறைபுளாம் ஆணவன்பாற் பழகிய பெண்கள் இன்னும் [ஆண் மக்களே சொல்வதைப் போல்] ஒழுக்க வுணர்ச்சி பெறவில்லையென்றால் இதற்குக் காரணம் என்னவாயிருக்கக் கூடும்? 'கடவுள்' இவர்களை இயற்கையிலேயே இவ்வுணர்ச்சி யில்லாமற் படைத்திருக்கலாம் என்று ஒருவரும் [ஆண் மக்கள்] கூட கூற முன் வரமாட்டார்கள் என்பது திண்ணம். பின் என்னவாயிருக்கும்? அது என்னவென்றால், ஆதிக்கமும், ஆட்சியும் செலுத்தி வந்துகொண்டிருந்த ஆண் பாலாரிடமே அவ்வொழுக்கம்' என்னும் பண்டம் இல்லாமல் இருந்ததே யாகும். 'அரசன் எப்படியோ குடிகள் அப்படி' 'ஆண்கள் எப்படியோ பெண்கள் அப்படி' பெண்கள் ஒழுக்கம் அத்திருப்பின் ஆண்களும் அவ்வாறே. ஆகையால் பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கு அதிக ஒழுக்கம் இல்லை யென்பது அவர் வாய்ப்பட்டே பெறப்பட்டது. அப்படியானால் அவர்கள் [ஆண்கள்] ஒழுக்கத்தில் அளவுகடந்த கட்டுப் பாராட்டுதல் அயோக்கியத்தனமும், போலித்தனமுமேயன்றி வேறல்ல.

இன்னும் சிலர் என்ன கூறுகின்றார்கள் என்றால் 'எதோ ஒரு சில ஆங்கிலக் கற்றவர்களும் எவ்விதத்திலும் தமது தேசப் பெண் மக்களது உண்மை யபிப்பிராயங்களையும், தேவைகளையும் நன்குணராதவர்களும் ஆகிய பெண்டிர்கள் கூடி தம் இஷ்டப்படி விவாஹரத்து வேண்டும் என வீண் வார்த்தையாடுகின்றனர்' நாம் இதை ஒப்புக்கொள்வதற்கு முன்னர் இவர்களை இரண்டுகேள்விகள் கேட்க அவாவுகின்றோம். முதலாவதாக இவர்களுங்கூட, இதே ஆங்கிலம் படித்தறிந்தொகையினராகிய பெண் மக்கள் 'பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும்,பெண்களுக்கும் ஆண்களைப் போல சமபாகம் தந்தை மூதலியவர் பொருளில் பெறும் உரிமை வேண்டும்' என இது போன்ற தீர்மானங்கள் கொண்டுவந்தால் அதை முழுமனதோடு ஒப்புக்கொள்வதுடன் இவ்வாறு இப்பெண் தலைவிகள் தம்பாலாரைக் காக்க முன் வருவதற்காகப் பாராட்டவும் செய்கின்றனர். ஆனால் இதே பெண்தலைவிகள் பெண்களுக்கு விவாஹ விடுதலை வேண்டுமென்றால் 'வந்தது விபத்து. இப்பெண்கள் பேசமாதர்களின் உண்மை யபிப்பிராயத்தை எவ்வாறு கண்டு கொண்டனர் இவர்கள் செய்வது தவறு. மற்றமாதர்கள் இவர்கள் கூறுவதை யொப்புக்கொள்ளார்கள்' என மழுக்கின்றனர் நண்பர்களே! சற்று யோசியுங்கள் இத்தகைய மக்கள் சிறிதேனும் கூடாப் பொருத்தம் என்பது உடையவைகள் ஆனால் 'ஒரு விஷயத்தைப் பற்றித் தம் தேசப்பெண் மக்கள் சார்பாகப் பேச உரிமையுடைய தலைவிகள் மற்ற விஷயங்களைப் பற்றியும் பேச அவர்களுக்கு அதே வுரிமை யுண்டு என்பதை ஒப்புக்கொண்டேதான் தீர வேண்டும். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணையும் சென்று இதைப் பற்றி யவர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரியும் வரை நாம் ஒன்றும் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் அது மிகவும் முடியாத காரியம். அவ்வாறு அது செய்யும்வரை அப்பெண்கள் தலைவிகளின் அபிப்பிராயத்தை நாம் ஒப்புக்கொண்டேதான் ஆகவேண்டும். இரண்டாவதாக, 'இந்தியாவிற்குச் சுயராஜியம் தேவை' யென ஆங்கிலவற்ற சில இந்தியர் வேண்டியபோது 'இவர்கள் ஊமையான கோடான கோடி இந்தியர்களின் பிரதிநிதிகள் அல்லவேயல்ல; இவர்கள் அவர்கள் சார்பாகப் பேச வுரிமையில்லாதவர். எனெனின் அவர்கள் சுயராஜியம் ஒருக்காலும் வேண்டிலர்' என்று ஓடையர் முதலியோர் சொல்லின் அதில் உண்மை யுண்டா? இல்லை. அப்படியில்லையானால் அதே ஓடையர் கூற்றைச் சற்று மாற்றிக் கூறும் இம்மக்களின் வார்த்தையில் என்ன வளம் இருக்கின்றது? என்ன வாய்மை கிடக்கின்றது? போலிவாய்மையும், சுயநலப் புன்மையுமன்றி வேறொன்றுமில்லை.

இதுவரை நாம் கூறிவந்தவைகளேயன்றி நம் சமூகத்திற்கு விவாஹ விடுதலையென்பது இன்றியமையாதது என்பதற்கும் அது இல்லாத காரணத்தால் நம் பெண்மக்கள் எவ்வளவு தூரம கஷ்டப்படுகின்றனர் என்பதற்கும் உதாரணமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்குமுன் திருமதி காந்தியடிகளுக்கும், ஒருசிறுபருக்கும் 'யெளன இந்தியா' என்னும் பத்திரிகைமூலம் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றி இங்கு கவனித்தல் அவசியம் என்று கருதுகின்றோம். அச்சிறுபர் பின்வரும் கருத்தையமைத்து காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். 'எனது தங்கையின் கணவன் இப்பொழுது குடி முதலிய தீத்தொழில் புரிந்து வருவதுமன்றித் தன் மனைவியை அளப்பருந்துன்பங்கட்கு ஆளாக்கிவருகின்றான். அவளை

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

விதவைகளுக்கும் திருப்பதிக்கும் மொட்டை அடிப்பவர்களுக்கு.

(சித்தக்காடு K. ராமையா)

விதவை என்ற பெயரால் பெண் சமூகத்தை உலக வாழ்க்கையிலிருந்து பிரித்து உயிரோடு வதைத்துக்கொல்லும் பற்பல கொடுமைகளில் மொட்டையடித்து மூக்காடுபோடும் ஓர் கொடிய செய்கையும் ஒன்று. இப்பழக்கம் வைதீக மத சாஸ்திர சம்பிரதாயங்களில் ஓர் முக்கிய விஷயமாக வழங்கிக்கொண்டு வருகிறது. குறிப்பாக இவ்வழக்கம் பிராமண சமூகத்தினரிடத்திலேயே பெரிதும் கீழ்ந்து கொண்டிருந்தது. பிரஸ்தாப கோஷ்டியாரை காப்பியடிக்கும், சில சைவ, வைணத் திருமேனிகளும், தங்கள் விதவைப்பெண்களுக்கு மொட்டையடித்து மூக்காடுபோடும் பழக்கத்தை பின்பற்றியதோடு, கடவுள், மதம், சாஸ்திரம், கோயில் போன்றவைகளின் பெயரிலேயே அனுசரிக்கத் தொடங்கி விட்டார்கள். நாகரீக உலகத்தின் காலச்சக்கர வேகம் தீவிரமாக ஓடிக் கொண்டிருக்கும் இந்தச்சமயத்திலும் கூட பெண்களுக்கு மொட்டையடிப்பது சரியா? தப்பா? என்று சாஸ்திரத்தைப்புரட்டும்குருட்டுசிகாமணிகளின் குதர்க்க புத்தியையும், "திருப்பதி கோயிலுக்கு மொட்டையடிப்பது மேலா? ராமேஸ்வரத்திற்கு மொட்டையடிப்பது மேலா?" என்ற ரசாயன ஆராய்ச்சியில் கவலைகொள்ளும் சோணகிரிகளின் புத்தியையும்பொது நோக்கோடு பார்க்கும்போது இறங்க வேண்டியிருக்கிறது. ஆட்டுமந்தை போல் பின்பற்றும் இவ்வித மூட பக்தர்களுக்கு அவ்வப்போது தோன்றிய சிந்திருத்த இயக்கங்கள் நியாயமான முறையில்எடுத்துப் போதித்திருந்தாலும் உண்மையை மறைக்கும் சுயநலப்புலிகளான வைதீக கும்பல் குறுக்கிட்டு மனித உரிமைக்கு இன்றியமையாதவைகளை சூறையாடியதே பொதுவாகக் குருட்டுப் பழக்கத்தின் அஸ்திவாரமும், குறிப்பாக மொட்டையடிக்கும் பழக்கத்தின் அஸ்திவாரமும் பலப்பட்டதோடு, அவைகள் பாமரர்களின் இரத்தோட்டத்தோடும் இரண்டறக்கலந்துவிட்டது. அரசனிலிருந்து குடிகள் ஈறாக குருட்டுப் பழக்கத்தில்ஊறிவிட்டபடியால்எவ்வித சிர்திருத்தக்காராகளின் வேலையும் அவ்வப்போது நசுக்கப்பட்டே வந்திருக்கிறது—நாட்டு மக்களின் நிடமான உருவத்தையே மாற்றியிருக்கும் பாசமான "கடவுள், மதம், கோயில், தாலி" விதவை பால்யமணம் பெண் அடிமை, மொட்டையடித்தல், புரோகிதம், போன்ற குருட்டுப் பழக்கவழக்கங்களை அறவே ஒழித்து ஒவ்வொரு தனி மனிதனையும், சுதந்திர வீரர்களாக செய்வதென்ற நமது சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக,மொட்டையடிக்கும் மூட்டாள் தனமான பழக்கத்தைப் பொறுத்து ஒருகதை சொல்கிறேன் கேளுங்கள்! மொட்டையடிக்கும் கொடுமையைப் பொறுத்து சுயமரியாதை பாஷையில் சொல்வதைப் பிடிக்காத வைதீகர்களும் வைதீகர்களைப் பின்பற்றி நிற்கும் ஏனைய பக்தர்களுக்கும், சாஸ்திரபாஷையிலேயே ஓர் சம்பவத்தை குறிப்பிடுகிறேன்.

மொட்டையடிப்பதற்கு முக்கியமான வேண்டுதல் ஸ்தலம் திருப்பதி என்பதை வைதீக கோஷ்டியாரில் யாரும் மறுக்கமுடியாததாதலால் தங்கு நடந்த கடவுளின் திருவிளையாட்டையே சொல்கிறேன்.

வைதீகருள்ளிட்ட, மொட்டையடிப்பதில் அனுதாபமுள்ள அனைவரும் நிதானத்துடன் படித்தருளுமாறும் வேண்டுகிறேன்:—

படிப்பதின் மூலமாகவாவது சில வைதீகர்களுக்கு சுயமரியாதை இயக்கத்தின் மேல்கொண்டிருக்கும் காஸ்தீக துவேஷம் நிவர்த்தியாகுமென்றும் கருதுகிறேன். திருப்பதி க்ஷேத்திரத்தின் மூலமாக நடந்த சம்பவமாவன:—

பக்த விஜயக் கதை.

"வேதாத்தியான சம்பன்னர்களும், மகா வித்துவான்களாய பிராமணர்களும் அடங்கியதும், திருப்பதி வெங்கிடாஜலபதி புண்ய க்ஷேத்திரத்திற்கு வடமேற்கிலிருப்பதுமான "தரிகொண்ட" என்ற ஓர் கிராமத்தில் "வசிஷ்ட கோத்திரத்தில் பிறந்தவரும், புண்ணிய சாலியுமாகிய திருவாளர் திருஷ்ண அய்யர் என்ற ஓர் பிராமணர் இருந்தார். நிலம், நீர், தன தான்ய சம்பத்துடையவராயும், பஞ்சபாண்டவர்களைப்போல் 5 திருக்குமாரர்களையுடையவருமாயிருந்தார். ஆனால் அவருக்கு ஓர் பெண் சந்ததியில்லாத பெறுகுறையால் திருப்பதியிலிருக்கும் உயர்திரு வெங்கிடாஜலபதி சுவாமியை அனேக வருஷம் பிரார்த்தனை செய்து கொண்டார். வெங்கிட்டாஜலபதியின் கருணையானது கிருஷ்ண அய்யருக்கு பெண் ஆசையை தீர்க்கும்பொருட்டு, "சுவாமியுடைய சஞ்சாரத்தையே ஷெ. கிருஷ்ண அய்யருக்கு புத்திரியாய் பிறக்கும்படி செய்து விட்டார். வெங்கிடாஜலத்தின் வரப்பிரசாதத்தால் பிறந்த குழந்தைக்கு வெங்கம்மாள் என்று பெயரிடப்பட்டது. பெருமான் அனுக்கிரஹத்தால் பிறந்த பெண் என்கின்ற காரணத்துக்காக சொல்லமுடியாத பிரியத்தோடு வளர்ந்து வந்தார். பிராமணர் ஜாதிப்படி அப்பெண்ணுக்கு பாலியத்தில் விவாகம் நடந்துவிட்டது. நாட்கள் சென்றதும் யுக்த வயதடைந்ததோடு, கமலத்தில் அவதரித்த லக்ஷ்மியைப்போல் பிரகாசித்தது. யுக்த வயதடைந்த தனது குமாரத்திக்கு நிஷேக முகூர்த்தம் செய்வதற்கு காலத்தைக் குறிப்பிட்டார். குறிப்பிட்டகாலத்தில் வெங்கம்மாளுக்கு நிஷேக முகூர்த்தம் முடிந்தது. சாந்தி முகூர்த்தம் முடிந்த ஒரு சிலதினத்தில் வெங்கம்மாள் புருஷன் வைகுண்டலோக பதவியடைந்து விட்டான். கைம்பெண் ஆகிவிட்ட வெங்கம்மாளுக்கு குல ஆசாரப்படி மொட்டையடித்து மூக்காடு போடும் வேலையில் உள்ளூர் பிராமணைத் தமர்கள் விசேஷ கவனம் செலுத்த முற்பட்டார்கள். ஆனால் வைதீகர்களின் ஆர்பாட்டங்களுக்கு வெங்கம்மாளாக அவதரித்திருக்கும் திருப்பதி பெருமானின் சம்சாரம் இடம் கொடுக்கவில்லை. பிராமணைத்தமர்களின் கூக்குரலுக்கு செவிசாய்க்காத வெங்கம்மாளை ("சுயமரியாதை இயக்கத்தை நாத்திகபட்டம் சூட்டித்தள்ளுவது போல்") குலபிரஷ்டம் செய்து விட்டார்கள். வீட்டைவிட்டு தூரத்தி விட்டார்கள். பலவாறாக தூஷித்தார்கள், கற்களால் அடித்தார்கள், குலத்துரோகி என்றும் விபசாரி என்றும் சொன்னார்கள்.

இப்படி இருக்கையில் திருப்பதி மகந்து பரமபரையில் வந்த ஒருவர் இந்த தரி கொண்ட கிராமத்திற்கு விஜயம் செய்தார். பிராமணைதமர்களெல்லாம் மந்தை மந்தையாக தெரிசிக்கப்போனார்கள். வெங்கம்மாள் பேரில் வேகம் கொண்ட பார்ப்பனர்களின் ஆத்திரத்தை தனித்துக்கொள்வான் வேண்டி அம்மகந்து விடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள். குலாசாரப்படி கோமாளி வேஷம் தரிப்பதற்கு மகந்துவை சிபாரசு செய்யச் சொன்னார்கள். உடனே மகந்து அவர்களும் வெங்கம்மாளை அழைத்து வரும்படி சொன்னார். மகந்துவின் பியூன்கள் வெகுமரியாதையிடம் சென்று குருக்களின் ஸ்ரீமுகத்தை சொல்லிக் கூப்பிட்டார்கள். போஜனம் செய்து விட்டு வருவதாக வெங்கம்மாள் சொன்னாள். மகந்துவின் உத்திரவு கண்டதும் மலபாதைக்குப்போய் இருந்தாலும் மல சுத்தி செய்து கொள்ளாமல் வாய்பொத்தி ஓடிவரவேண்டியிருக்க வெங்கம்மாள் போஜனம் செய்து வருவதாக சொல்லி அனுப்பு வித்த மறுமொழி மகந்து உள்ளிட்ட எல்லா பிராமணர்களுக்கும் ஆத்திரத்தை உண்டுபண்ணிவிட்டது. ஆத்திரம்கொண்ட அய்யர் கூட்டதார் வெங்கம்மாளை பலவந்தமாக தூக்கி வந்து மகந்துக்கு முன்பக்கம் விட்டார்கள். வழக்கப்படி மகந்துக்கு நமஸ்காரம் செய்து கொள்ளாமல் வெங்கம்மாள் சும்மாநின்று கொண்டிருந்ததைப்பார்த்த பிராமணர்கள் மகந்துவுக்கு நமஸ்கரிக்கும்படி பல வந்தப்படுத்தியும் நமஸ்காரம் கடக்கவில்லை. வெங்கம்மாளுக்கு கர்வம் பிடித்திருக்கிறது நல்ல காலமில்லை. கிரஹம் பிடித்திருக்கிறது. என்னென்னவெல்லாம் சொன்னார்கள். என்ன சொல்லியும் வெங்கம்மாள் நமஸ்காரம் செய்யவில்லை. அடித்துக்கூடப்பார்த்தார்கள். ஒன்றிலும் பலன்தராததைக்கண்டு ஸ்ரீமத் மகந்து அவர்கள் வெங்கம்மாளைப்பார்த்து 'ஹே! மூடமதியே உனக்கென்ன கர்வம் பிடித்திருக்கிறதா? என் தரிசனம் கிடைக்காமல் உலகமே தவித்துக்கொண்டிருக்கும்போது நீ மமதையால் நமஸ்காரம் செய்யாமலிருப்பதற்குக்காரணம் என்ன?" என்று கேட்டார். அதைக்கேட்ட வெங்கம்மாள் 'ஐயா! நீர் அமர்ந்திருக்கும் சிம்மாசனத்தை விட்டு அப்புறம் போவீராஞல் நமஸ்கரிக்கிறேன்' என்று சொன்ன வெங்கம்மாள் வார்த்தையைக்கேட்ட மகந்து கோபமடைந்து பலகடோமான வார்த்தை சொன்னார். ஞானிகள் பிராமணர்கள், வித்வான்கள்போன்ற சகலமானவர்களும் எனக்கடிமையாய் இருந்து தரிசனம் செய்யும்போது கேவலம் ஸ்திரீஜாதியான வெங்கம்மாள் அலக்ஷியப்படுத்தியதானது மகந்துவுக்குவருத்தத்தைக் கொடுத்து விட்டது. கடைசியாக ஒன்றும் செய்ய முடியாத மகந்து குலதர்மத்தைக் காப்பாற்ற சாந்தம் தரிக்க வேண்டுமென்ற போலிச் சமாதானம் சொல்லி சிம்மாசனத்தை விட்டு அப்புறம் சென்றார். வெங்கம்மாள் தன்இருகரங்களையும் கூப்பி நமஸ்காரம் செய்தாள் உடனே சிம்மாசனம் அக்கினி ஜ்வாலையில் அகப்பட்டு படபடவென்று முறிந்து எரிந்து பஸ்மீகரமாகிவிட்டது. இவ்வாச்சர்யகரமான சம்பவத்தைப்பார்த்த மகந்து அவர்கள் நடுநெல்லினர். சிம்மாசனத்திலிருந்தால் தன்கதி என்னவாயிருக்குமென்று எண்ணினர். இப்பொல்லாத பார்ப்பனர்கள் வார்த்தைகேட்டு புத்தியிழந்தோமேன்று வருந்தினர்.

இக்கதை திருப்பதிஸ்தலத்தின் பெயரால் எழுதப்பட்டிருக்கும் 'பக்த விஜயம்' என்ற நூலில் காணப்படுவதே தவிர சுயமரியாதைக்காரன் சொல்லியதல்ல.

ஓர் பார்ப்பன குலத்தில் பிறந்த வெங்கம்மாளுக்கு குருட்டு குல சம்பிரதாயங்கள் பிடிக்காததால் பார்ப்பனர்களையும் மகந்துவையும் எதிர்த்து நின்றிருந்தாலும், அப்பெண்மணியின் செயலைகொண்டு ஏமாறுகிற இதரர்களும் கண்விழித்துக் கொள்வார்களோ என்றபயத்தால் உயர் திரு வெங்கிடாசலபதியின் சம்சாரமே அவதாரம் செய்து திருவிளையாடல் புரிந்ததாக கடவுள் போல் பார்ப்பனர்கள் கதைகட்டி

(தொடர்ச்சி 16ம் பக்கம்பாருங்கள்.)

இந்தியாவின் பொது பாஷை இங்கிலீஷா? ஹிந்தியா?

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

இந்திய தேசத்திற்கு ஒரு பொது பாஷை ஏற்படுத்தவேண்டும் என்னும் நோக்கத்துடன் காங்கிரஸ் மகாசபையார் ஹிந்தி பிரசார சபைகளை யேற்படுத்தி அவைகளின் மூலம் ஹிந்தி பாஷையை தேசமெங்கும் பரப்ப முயற்சி செய்து வருகிறார்கள். இது பொது ஜனங்களைப்பற்றிய விஷயமாகையால் இதைப்பற்றி ஒவ்வொருவரும் தீர யோசித்து ஆராய்ந்து முடிவு செய்யவேண்டியது அவசியம்.

நமது இந்திய தேசத்தில் பற்பல பாஷைகள் பேசப்படுவது ஜனங்களை ஒற்றுமையில்லாதபடி செய்து விடுகிறதென்றும், இனி வரப்போகும் சுயராஜ்யத்தில் அரசியல் விவகாரங்கள் நடைபெறுவதற்கு ஒரு இடைஞ்சலாயிருக்கும் என்றும், இக்குறைகளை நீக்குவதற்காக ஹிந்தி பாஷையை தேசத்தின் பொது பாஷையாகச்செய்யமுயற்சி செய்வதாகவும் காங்கிரஸ்காரர் சொல்லுகிறார்கள்.

இது முழுப் புரட்டாகும். ஹிந்தி பாஷை இந்தியாவின் பொது பாஷையாக இருந்தால் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அது பெருந்தடையாயிருக்கும் என்பதையும் இங்கிலீஷ்பாஷை இந்தியாவின் பொது பாஷையாயிருந்தால் இந்தியா முன்னேற்றமும் மேன்மையும் அடையமுடியும் என்பதையும் கீழே காரணங்களுடன் விளக்குவோம்.

1. ஒரே பாஷையை இந்தியர் பேசினால் ஒற்றுமையுண்டாகுமென்றும், ஆகையால் ஹிந்தி பாஷையை எல்லோரும் பொதுப்பாஷையாக வழங்கவேண்டும் என்பதுபற்றி முதலில் யோசிப்போம்.

இந்தியாவில் பல பாஷைகள் பேசுவதால் ஒற்றுமையில்லை என்றசொல்லுவதற்கில்லை. இந்தியாவில் ஒற்றுமையில்லாதகற்குக்காரணம் பல சமயங்களும் பலவித ஜாதிப்பிரிவுகளும் இருப்பதுதான். இந்தியாவில் ஒரே விதமான சமயமும் ஜாதிப்பிரிவில்லாமலும் இருந்தால் இந்தியாவில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஏற்பட்டுவிடும். இந்தியாவில் சைவம், வைணவம், ஸ்மார்த்தம், மத்வம், பௌத்தம், ஜைனம், முகமதியம், கிறிஸ்துவம் முதலிய பல மதங்கள் இருக்கின்றபடியால் நமது நாட்டில் ஒற்றுமை உண்டாகவில்லை. அதைப்போலவே இந்தியர்களில் பலபல ஜாதிப்பிரிவுகளும் தீண்டப்படாதவன், தொடப்படாதவன், பார்க்கப்படாதவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற கட்டுப்பாடுகளும் இருப்பதால் தான் ஒற்றுமையும் சகோதர உணர்ச்சியும் உண்டாகவில்லை. இந்த மதவித்தியாசங்களையும் ஜாதி வித்தியாசங்களையும் ஒழித்து விட்டால் இந்தியாவைப்போல ஒற்றுமையுள்ள தேசத்தைக்காண முடியாது. இதைச்செய்யாமல் ஹிந்தி பாஷையைப்படித்தால் ஒற்றுமை உண்டாகும், ஆகையால் ஹிந்தி படியுங்கள் என்று சொல்லுவது பாமர மக்களை ஏமாற்றும் சூழ்ச்சியல்லவா? என்று கேட்கின்றோம்.

2. இந்தியா சுயராஜ்யம் பெற்றால் ஒரே மாதிரியாக அரசாட்சி நடைபெறுவதற்காக (அதாவது அரசியல் விஷயத்தை முன்னிட்டு) ஹிந்தி பொதுப்பாஷையாகயிருக்கவேண்டும் என்றும் ஆகையால் எல்லோரும் ஹிந்தி பாஷை படியுங்கள் என்றும் சொல்லுவதும் முழுத் தவறுகும் எப்படியென்றால் சொல்லுவோம். இப்போது அரசாங்கபாஷையாயிருக்கிறது இங்கிலீஷ் பாஷை ஆனால் இங்கிலீஷ் பொது பாஷையல்ல: தேச ஜனங்களில் 100க்கு 90 பேர் படிக்கத்தெரியாதவர்கள். அதாவது இங்கிலீஷ் பாஷையே தெரியாதவர்கள். அப்படியிருந்தும் அரசாங்க காரியங்கள் முறையாகத்தான் நடைபெற்று வருகிறது. கிராமவாசிகள் எல்லோரும் இங்கிலீஷ் கற்றுக்கொண்டு தானே கோர்ட்டுகளில் வழக்காடுகிறார்கள்? இங்கிலீஷ் கற்றுக்கொண்டுதானே நிலம் காணி விற்பதும் வாங்குவதும் செய்கிறார்கள்? இல்லையே. அதுபோல இந்தியாவுக்குச் சுயராஜ்யம்கிடைத்து காங்கிரஸ் அரசாட்சி செய்வதாயிருந்து ஹிந்திபாஷையே அரசாங்கபாஷையாயிருந்தாலுங்கூட, ஹிந்திபாஷையை எல்லோரும் படிக்கவேண்டும் என்பதும் அது இந்தியாவின் பொது பாஷையாயிருக்கவேண்டும் என்பதும் யோசனையற்ற காரியமாகும். இந்தியாவில் பல பாஷைகள் பேசப்படுவதால் ஒற்றுமையில்லை என்பது உண்மையானால் இந்தியாவில் வழங்கும் பாஷைகள் எல்லாம் (தற்காலம் இருக்கும் நிலைமையில்) முற்போக்கான அறிவைத்தரக் கூடியனவல்ல.

இப்போது சுயராஜ்ய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதும் சுயராஜ்யம் கேட்பதும் சுதந்திர புத்தி பெற்றதும் ஹிந்திப்படிப்பால் ஏற்பட்டதா? இங்லீஷ் படிப்பால் ஏற்பட்டதா என்பதை யோசித்துப்பார்த்தால் விளங்கும். ஹிந்தி படித்திருந்தால் அரசன் விஷ்ணு அபிசமாய்க்கருதப்படுவான். இங்கிலீஷ் படித்ததால் சுயராஜ்யம் கேட்கமுடிந்தது. அன்றியும்லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாட்டில் மேன்மை தங்கிய நவநகர் மகாராஜா, அவர்கள்

She (Britain) has given India a unifying medium through the English language, the noble literature of which has helped to introduce a new spirit of liberty and self-respect.

("ஆங்கில பாஷையின் மூலம் பிரிட்டன் இந்தியாவுக்கு ஒற்றுமையையுண்டாக்கும் ஓர் சாதனத்தைக்கொடுத்திருக்கிறது. அப்பாஷாஞானம் நமக்குள் சுதந்திரம், சமரியாதை முதலிய உணர்ச்சிகளை உண்டாக்க உதவி செய்யக்கூடியதாயிருக்கின்றது".)

என்று பேசியிருப்பதைக்கவனித்தால் இங்கிலீஷ் பாஷையின் பிரயோசனம் நன்கு விளக்கும்.

4. ஹிந்தி பாஷையைவிட இங்கிலீஷ் பாஷையைசுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடும். இங்கிலீஷ் 26 எழுத்துக்களைக்கொண்டது ஹிந்தியோ 30க்கு மேற்பட்ட எழுத்துக்களையுடையது. அன்றியும் தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடர், மராட்டியர், குஜராத்தியர், வங்காளி, ஒரியர், நேப்பாளி, ஹிந்தி பேசுவோர் ஆகிய எல்லா இந்தியர்களிலும் இங்கிலீஷ் படித்தவர் கொஞ்சம்பேராவது இருக்கிறார்கள். ஆகையால் இங்கிலீஷையே சுலபமாகக் கற்றுக்கொள்ளமுடியும். ஹிந்தி பாஷையைப் புதிதாகக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறதோடு அதனால் தகுந்த பலனும் கிடைக்காது

5. ஆங்கில பாஷைதான் இந்தியரின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் உதவியாகயிருக்கக்கூடியது. ஹிந்தி பாஷையைப்படித்தால் அதிக பிரயோஜனம் ஒன்றும் உண்டாகாது. அதற்கு மாறாக தீமைகள் தான் விளையும். இன்னும் ஒரு விஷ

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

"இன்றே சைவராகுங்கள்!---இன்றேல்?"

(சாமவேதனர்.)

"லோகோபகாரி" என்ற வாரப் பத்திரிகையில் தலைப்பிற்காணும் வாக்கியத்தைக்காணலாம். குறித்த பத்திரிகை 'தேசியம்' 'தமிழ்' 'சைவசமயம்' 'தாவர உணவு' முதலியவற்றின் வளர்ச்சிக்காய்ப் பாடுபடுவதாய்ச் சொல்லப்படுகின்றது. முதல் மூன்றிற்காகப் பலர் பலகாலங்களில் பல்வேறு விதங்களிற் பாடுபட்டிருக்கின்றனர். பலனேத்தான் காணோம்! ஆனால் தாவர உணவின் வளர்ச்சிக்காக அல்லது சாதாரணமாய்ப் பிழையாக வழங்கப்பட்டுவரும் "சைவ" உணவிற்காக முன்னொந்து பாடுபடுவதில் 'லோகோபகாரி'யே முதலிடம் வகிக்கின்றதெனலாம். அப்பத்திரிகையின் இத்தொண்டால் நாட்டுக்கு நலன் விளையுமா? அல்லது தீங்கு நேருமா? என்பதையாராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தாவர உணவிற்கு எவ்வாறே 'சைவ உணவு' என்ற தவறான பெயர் சூட்டப்பட்டு வழங்கப்பெற்று வருகின்றது. இத்தத் தவறினால் அறிவுக் கல்வியறிவற்ற சைவர் (சைவசமயிகள்) தமது சமயத்தைச் சேர்ந்ததே 'சைவ உண'வென்றும், தாம் மாத்திரமே தாவர உணவினரென்றும் பிழையாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர். பௌத்தர், சமணர், கிறிஸ்துவர், ஜைனர், ஆதியாம் வேறு சமயத்தினரிலும் எண்ணற்றோர் தாவர உணவினராயிருக்கின்றனரென்பதைச் சைவராதியார். அன்றியும் பௌத்த, சமணச் சமயங்களே முதன்முதல் தாவர உணவுப் பிரசாரஞ்செய்யத் தலைப்பட்டனவென்பதையும் அவராதியார். நமது 'குடி அரசு'விலும் எக்காரணம் பற்றியோ 'தாவர உணவை'ப்பற்றிப் பேசும்பொழுது 'சைவம்' என்றும் 'புலால் உணவை'ப்பற்றிக் குறிப்பிடுங்கால் 'வைணவம்' எனவும் எழுதப்படுகின்றது. 'சைவ'த்தையும் வைணவத்தையும் பகிடி பண்ணவோ, என்னவோ அறியேன்!

பௌத்தர் காலத்திற்கு முந்திய இந்தியாவில் மக்கள் புலால் உணவினராகவே யிருந்தனரென்பதற்குச் சரித்திரத்திற் போதிய சான்றுகள் உள்ளன. நமது பழைய 'இருடி'கள், 'முனிவர்'கள் அனைவரும் புலால் உணவினரே. மான், சூதிரை, மாடு முதலிய மிருகங்களின் இறைச்சியை நமது முன்னோர்கள் தாராளமாய் உண்டுவந்தனர். வேள்வி (யாகம்) யில் கணக்கற்ற விலங்குகளைக்கொன்று தின்றுவந்த நமது முன்னோர்களது சமயத்தின் விபரீதப் போக்கைக்கண்டிக்கவே கௌதமசாக்கிய முனிவரி தண்ணளி (சீவகாருணியம்) மிக்கோராய் யாகத்தை முதன்மையாகக்கொண்ட அக்கால 'இந்து' சமயத்தைத் தாக்கினர். நமது சிறந்த புதிய மதத்தை அல்லது வழியைத் தோற்றுவித்தார். தண்ணளி மிகுதியுமுடைய பௌத்த சமயத்தைமக்கள் விரைந்து ஏற்றுக்கொள்ள முற்பட்டதைக் கண்ட நமது 'இந்து' சமயகுரவர்கள் புலால் உணவைக் கண்டித்துக் கவிகள்பாடித் தாவரஉணவை மேம்படுத்தினர். அச்சமயத்திலிருந்து தாவர உணவினர் மேம்பட்டோராயும், புலால் உணவினர் புலையராகவும் பிழையாக எண்ணப்பட்டு வருகின்றனர். புலால் உணவைக் கைவிட்டு தாவர உணவை மேற்கொண்ட நம் முன்னோர் பலவீனராயினர். ஆனதுகொண்டுதான் பிறநாட்டினர் இந்தியாவின்மேற் படையெடுத்து வந்து நம்மவரைத் தாக்கி எளிதில் முறியடித்து நாட்டைக் கைப்பற்றினர்.

இனி தாவர உணவு சிறந்ததோ புலால் உணவு சிறந்ததோ என்ற விவாதம் இன்னும் முடிவடையவில்லை. இருபகுதியினரும் பல ஆதாரங்களுடன் தத்தம் கட்சியை நிலைநாட்ட முயல்கின்றனர். ஆயின் உலகில் பெரும் பகுதியினர் புலால் உணவினரென்பதும், புலால் உணவினரே பேரறிஞராய், கலைவாணராய் விஞ்ஞானப் புலவர்களாய் கருமவீராய் செயலாளராய்த்திகழ்கின்றார்களென்பதும் மறுக்கமுடியாத உண்மைகளாகும். புலால் உணவினரே 'வேதங்களை'யும் 'உபநிடதங்களை'யும் எழுதினர். அவற்றிற்கு உரைசொல்ல முடியாது நம்மவர் மயங்குதற்குக் காரணம் இரத்தப்பசையற்ற தாவர உணவை உண்பதினாற்றான்!

புலால் உணவினரான மேனாட்டினரைவிடத் தாவர உணவினரான நம்மவர் உடல் நலம், வலிமையுடையோராயாதல், நீண்ட ஆயுளுள்ளோராயாதலிருக்கின்றாரென எவரேனும் சொல்லக்கூடுமா? நாம் பேடிகளாய்க் கோழைகளாய் மாறியதற்கு 'சிவகாருணியம்' எனும் போலித்தத்துவ உணர்ச்சிக்கு முதன்மையளித்த நமது சமயங்களே யாகும். உலகில் ஒரு உயிர் உயிருடனிருக்கவேண்டுமாயின் இன்னொரு உயிரைத்தின்றேயாக வேண்டும் என்ற உண்மையைச் சிந்திப்போர் இலகுவில் அறிந்து கொள்ளலாகும். எங்ஙனமெனில் தாவர உணவினர் உயிருள்ள இலை, குழைகள், செடி, கொடிகள், காய், கனிகளைத் தின்கின்றனரேயன்றி காய்ந்து உலர்ந்து, சருகாய்ப்போனவற்றைத்தின்பரேல் உயிர்வாழமுடியுமா? அவர் அருந்தும் நீரிலும், சுவாசிக்கும் ஆகாயத்திலும் உயிர்களில்லையென்று கூறவியலுமா? எனவே உயிரைத்தின்றே உயிர்வாழ முடியும் என்பது பெறப்படுகின்றது.

எனவே உயிர்வாழ்வதற்கு உயிருள்ள பிராணிகளைக் கொன்று தின்னல் இன்றியமையாததாகின்றது. தம்மைச் "சிறந்தோர்" "மேலோர்" "சான்றோர்" யென்று எண்ணிக்கொள்ளும் தாவர உணவினர் உண்மையில் உயிர்க்கொலையைத் தவிர்க்கின்றனராவென்ற வினாவுக்கு விடையென்ன? இல்லையென்பதேயாகும். அன்றியும் அவர் தண்ணளியினராய் (சீவகாருண்யமுடையோராய்) இருக்கின்றனராயினும் அதற்கும் இல்லையென்றே கூறல் வேண்டும். பெருந்தொகையினரான தாவர உணவினரைக் கொண்ட நம் இந்தியாவில் மனிதத்தன்மையற்ற தண்ணளியில்லாத பல தீமைகளிருக்கின்றனவே! அத்தீமைகளைக்களைய முற்படுவோரை எதிர்ப்பவர் தாவர உணவினரேயன்றே? இந்தியாவிற் செய்யப்படும் சிர்திருத்தங்களுக்கு தண்ணளியுடைய உணவை உட்கொள்ளும் மக்கள் எதிர்ப்பானேன்?

புலாற் உணவினர் புலையர் என்பதும், அவர்களுக்கு ஈவிரக்கங்களிராவென்று கூறுதலும், அறிவற்றூர் கூற்றேயாகும். கிறிஸ்துவப் பாதிரிகளுக்கு விரோதமாய் எவ்வளவு சொல்லிடினும் புலால் உணவிரான அவர்கள் செய்துள்ள சீவகாருண்யச் செயல்களை நாம் மதியாது விடவியலுமா? புலால் உணவினரான மதப் பிரசாரகர்களுக்கு ஈவிரக்கங்களும், அநுதாபமும், பிறருக்குத் தொண்டாற்றும் எண்ணங்களும் எங்கிருந்து வந்தன?

எதிர்கால இந்தியாவில் இலை, குழைகளைத் தின்னும் செயலற்ற சோம்பருக்கு இடமேயிராது. உடல் நலம், வளம் வலிமையுடைய இளைஞர்களே வேண்டப்படுவர். 'வேதாந்தகேசரி" என்று போற்றப்பட்ட சுவாமி விவேகாநந்தரும் புலால் உணவின் அவசியத்தை யறிந்து பல விடங்களில் அதை மெச்சிப் பேசியிருக்கின்றார். ஆதலின் "இன்றே சைவராகுங்கள்" என்ற சோம்பர் கூச்சலை அறிவுடைய இளைஞர் கேளாது விடவேண்டும். அப்பேதையர் கூக்குரலைச் செவியேற்றல் நாட்டின் வளர்ச்சிக்குத்தடை செய்யுமென்பேன். அடுத்துவரும் காலத்தில் நம் நாட்டில் பல்வேறு போர்கள் எழலாம். அதற்கு "வெங்காயச் சாம்பார்களும்," "பருப்புக் குழம்புகளும்," "கத்திரிக்காய்ச் சட்டினிகளும்" சரிப்படா. திரு. மயிலை சீனிவேங்கடசாமி அன்றெழுதினதேபோல் தாவரமும், புலாலும் கலந்த கலப்புணவே அறிஞர் ஒப்பிய வலிதரு உணவாகும். அதனையே நமது இளைஞர்கள் உண்டு உடல் நலமும், வலிமையு மடைதல் வேண்டும்.

அன்றியும் நம் கண்ணிற்படும் இவ்வுலகத்திற்கும், இவ்வுலக மக்களுக்கும் பயன் விளையும் செயல்களில் ஈடுபட விரும்பும் மக்கள் கண்டிப்பாய் புலால் உணவை யருந்துதல் வேண்டும். நம் கண்ணிற்குத் தோன்றுத "மற வுலகத்திற்கும்," 'கடவுளுக்கும்' தொண்டுசெய்ய அனைவரும் செயலற்றசோம்பர் இலை, குழைகளைப் பறித்துத் தின்னட்டும். 'லோகோபகாரி"யின் கருத்தும் அதுதானே! என்னையோ வெனில்; 'இன்றே சைவராகுங்கள்'-'இன்றேல் நரகத்திற்காளாகுங்கள்!' என்பதன்றே அதன் உச்சரி? "ஆடு மாடு தின்போர்க்கு வீடு இல்லையடா" எனுங்கருத்துப்பட ஒரு வாக்கியம் குறித்த பத்திரிகையில் தடித்த எழுத்துக்களில் வரையப்பட்டிருந்தது. அதிலிருந்து நமக்கு விளங்குவதென்ன? "வைகுண்ட யாத்திரை"க்குத் தாவர உணவு "வைகுண்ட மாத்திரை" என்பதுதானே! அன்னமாயின் அத்தகைய பயனற்ற உணவை மக்கள் உண்ணுமாறு பிரசாரஞ் செய்தல் தேசத்துரோகமான செயலன்றே?

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று நமது "சைவர்"கள் திண்ணையிலிருந்தவாறே கூவுகின்றனர்! "சைவநீதி" தமிழ் நாட்டைக் கடந்து தானும் இன்னும் ஒரு அடியெடுத்து வைக்கவில்லையே! காரணமென்ன? "சைவாரது" "சைவ" (தாவர உணவு) உணவு அவர்களைச் செயலற்ற சோம்பர் ஆக்கிவிட்டமைதானே? தாவர உணவு உண்டபின் மக்கள் நித்திரைக்கன்றே செல்கின்றனர்! பிறகு செயல் புரியவும், தொண்டாற்றவும் எங்ஙனம் இயலும்? தாவர உணவினர் என்ன சொல்லிலும் பல தொல்லைகளையுடைய காலத்திலிருக்கும் நம் மனோர் 'தண்ணளி,' 'சீவகாருண்யம்,' 'புண்ணியம்,' 'அறம்,' 'தருமம்' என்பனபோன்ற வெறும் வார்த்தைகளில் ஏமாற்பட்டவராய் 'சைவர்' ஆகிவிடலாகாதென்று நம்மனோரைக் கேட்கின்றேன். பிறவிச் 'சைவரை' நான் புலால் உண்ணும்படி வற்புறுத்தவில்லை. ஆனால் 'உயர்ந்த சாதி'யாராகும் எண்ணத்துடன் புலால் உணவை விட்டவர்களும், 'இன்றே சைவராகுங்கள்' 'இன்றேல் நரகத்திற்குப்போவீர்கள்' என்ற கூச்சலுக்குப் பயந்து 'சைவரா'ன சபலப் புத்தியுள்ளோரும் 'ஆன்மசக்தி' யடையும் நோக்கத்துடன் தாவர உணவை மேற் கொண்டோரும், உடனே புலால் உணவை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துகிறேன்.

உழைக்க விரும்புவோர் நமது உடலை வலுப்படுத்தல்வேண்டும். அதற்குப்புலால் உணவே வேண்டற்பாலது. தடையின்றி வேண்டிய அளவு காய்கனிகளைத் தின்னலாம். ஆனால் புலால் இல்லாத உணவு சத்தற்றதே. நமக்குப்பயன் தரியாததே. சமதருமத்தை இந்தியாவில் நிலைநாட்ட விரும்புகாம்—தன் மதிப்புடன், வாழவிரு

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

ஈரோடு அர்பன் பாங்குத் தேர்தல்.

ஈரோடு அர்பன் பாங்கி டைரக்டர்கள்(நிர்வாகஸ்தர்கள்)தேர்தல் இம்மாதம் 22-ந் தேதி நடைபெற்றது. அதில் இப்பாங்கி ஏற்பட்டு இதுவரை இல்லாத அளவு ஊக்கமும் பரபரப்பும் காணப்பட்டது.

கடைசியாக 9 பார்ப்பனரல்லாதாரும் 2 பார்ப்பனரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பார்ப்பனக்கோட்டையாயும் அவர்களது உண்மை சிஷ்யர்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு மழைக்குக்கூடத் தங்குவதற்கு இடமில்லாதிருந்த இந்த அர்பன்பாங்கி பார்ப்பனரல்லாதார் இரண்டொருவரின் தியாகத்தின் காரணமாய் அவர்கள்வெளிப்படையாய் "கெட்டபேர்" வாங்கத் துணிந்ததின்காரணமாய் 9 பார்ப்பனரும் இரண்டு பார்ப்பனரல்லாதாருமாய் இருந்த ஸ்தாபனம் நாளாவட்டத்தில் சுயமரியாதை உணர்ச்சி யேற்பட்டு இப்போது 11-பேர்களில் 9-பேர் பார்ப்பனரல்லாதார் டைரக்டர்களாய் வர முடிந்தது. இதுவும் சரியான தேர்தல் என்று நம்மால் சொல்லிவிடமுடியாது.

தீண்டாதார் வகுப்புக்கு ஒரு டைரக்டரும் பெண்கள் வகுப்புக்கு குறைந்தபக்ஷம் ஒரு டைரக்டரும் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் அது உண்மையான பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியென்றே சொல்லலாம். அன்றியும் இப்போது தெரிந்தெடுக்கப்பட்ட 11 பேர்களிலும் வக்கீல்களும் டாங்கர்களுமே 100க்கு 90-வீதம் டைரக்டர்களாகி இருக்கின்றார்களே ஒழிய யாருடைய உபயோகத்திற்கு, யாருடைய நன்மைக்கு என்று அர்பன்பாங்கிகள் ஏற்பட்டனவோ அந்தக் கூட்டத்தாரின் பிரதிநிதிகளை பூதக்கண்ணாடி வைத்துத் தான் தேடிப்பிடிக்க வேண்டிய தாய் இருக்கின்றது.

ஆதலால் அடுத்த தேர்தல்களில் இம்மாதிரியாக அதாவது பார்ப்பனர்கள் கையில் இருந்து பறிக்கப்பட்ட ஸ்தாபனம் மற்றொரு வழியில் அவர்களைவிட மோசமானவர்களான லேவாதேவிக்காரர்கள் கைக்கும், முதலாளிகள் கைக்கும் போகாமல் தொழிலாளர்கள் கைக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் கைக்கும் போகும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்றே விரும்புகின்றோம்:

தகுதியானவர்கள் கிடைப்பதில்லை என்கின்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டு உலகம் உள்ள நாள் அளவும் ஏமாற்றுவது என்பது பார்ப்பன சூழ்ச்சிகள் எல்லாவற்றையும்விட மோசமான சூழ்ச்சியேயாகும்.

அன்றியும் பாங்கி நிர்வாக செல்வாக்கை மற்ற சுயநல சம்பந்த காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளும் உத்தேசமுள்ளவர்களுக்கு இதில் இடம் இருக்க நேர்ந்தால் அதுவும் ஒரு மோசமான காரியமாகும்.

ஆதலால் அடுத்த வருஷ தேர்தல்களில் ஓட்டர்கள் இன்னமும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். நிற்க தெரிந்தெடுக்கப் பட்ட டைரக்டர்களில் சிலர் தங்களுக்குத் தலைவர் ஸ்தானம் கிடைக்காது என்கின்ற காரணத்தால் தங்களுக்கு (அடங்கிய) மற்ற டைரக்டர்களையும் தேர்தலுக்கு போகவிடாமல் செய்யவும் கோரமே இல்லாமல் செய்யவும் முயற்சித்ததாகவும் தெரியவருகின்றது. இது அவ்வளவு மேன்மையான காரியமென்றோ, புத்திசாலித்தனமான காரியமென்றோ சொல்லிவிட முடியாது.

டைரக்டர்களில் யாருக்காவது, சொந்த விரோதம் இருந்தால் அப்படிப்பட்டவர் பாங்கியின் நன்மையைக் கோரி ராஜியாகப் பார்க்கவேண்டும். முடியாவிட்டால் ராஜினமா செய்திருக்கவேண்டும். அல்லது தன்னாலான நன்மையைச் செய்ய சௌகரியமுள்ளபோது செய்துவிட்டு சும்மா இருக்கவேண்டும். அப்படிக்கு இல்லாமல் தலைவராக வரக்கூடிய அளவு மெஜாரிட்டி பலம் இருக்கின்றவருக்குக் காரியத்தை நிர்வகிக்கச் சக்தி இல்லை என்பதாக ஒரு சமயம் யாருக்காவது தோன்றினால் அப்படிப்பட்ட வர்மெஜாரட்டியாரையும் தன்னைப் போலவே மதித்து தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருக்கவேண்டும். இல்லாதவரை தன்னால் கூடிய உதவி செய்து நிர்வாகம் திறமையாய் நடைபெற உதவி செய்ய முன்வரவேண்டும்.

இவைகள் ஒன்றுக்கும் கட்டுப்படாமல் தனக்குக் கிடைக்கத் தக்க நிலைமை இல்லை என்று காணப்படாததாலேயே மெஜாரிட்டி அபிப்பிராயத்திற்கும், பாங்கியின் நன்மைக்கும் எதிரியாயிருந்து நிர்வாகத்திற்கு முட்டுக்கட்டைபோடுவதற்குக் கட்சி சேர்ப்பதும், 'ஒருகை பார்க்கின்றோம்' என்பதும் பொது நலத்திற்கு விரோதம் என்பதோடு யோக்கியப் பொறுப்புக்கும் விரோதமான காரியமாகும் என்பது நமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

அன்றியும் இந்த முட்டுக்கட்டையின் கெடுதியை அறியவும் மற்றும் பாங்கியின் நல்ல நிர்வாகத்திற்கு எதிரியாய் இருந்தவர்கள் யார் என்பதைத் தெரியவும் முடியாதபடி அவ்வளவு அறிவற்றவர்கள் என்று ஓட்டர்களை இந்த முட்டுக்கட்டைக்காரர்கள் நினைத்துவிடுவார்களேயானால், அடுத்த தேர்தலில் அதன் பயனை அறியும்படி ஓட்டர்கள் செய்துவிடக்கூடும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தவிர தொட்டதற்கெல்லாம் நிர்வாகத்திறமையைப் பற்றிப்பேசுவது 100க்கு 99 விஷயங்களில் மதிப்பற்றதாகவும், சுயநலங் காரணமான வார்த்தை என்பதாகவும் வரவர பொதுஜனங்களால் கருதப்பட்டு விட்டது.

இனி அதைப் பற்றிப் பேசுவது பேசுபவர்களுக்குத்தான் பகுத்தறிவில்லை யென்று சொல்லப்படுமே தவிர மற்றபடி அது ஒப்புக்கொள்ளக்கூடிய காரியமாகாது என்றும் சொலலுவோம். ஏனெனில் நிர்வாகத்திறமைக்கு அளவு எடுக்கும் கருவி எது என்ற பிரச்சினைக்கு மறுமொழி சொல்லுவது இமயாதிரி ஆசாமிகளுக்குக் கஷ்டமான காரியமாயிருப்பதால்தான். மற்றபடியாருடைய நாணயத்திலாவது ஒழுக்கத்திலாவது குற்றம் சொல்லக்கூடுமானால் அதை யாரும் கவனிக்கவேண்டியதேயாகும்.

இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரசிடெண்ட், வைஸ்பிரசிடெண்ட் என்பவர்கள் நடவடிக்கையைப்பற்றிச் சொல்லப்பட்ட குற்றமெல்லாம் "இருவரும் விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டுக்குப் போய்விட்டு வந்தவர்கள்" என்றும், "பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி யுள்ளவர்கள்" என்றும்சொல்லப்படுவதை தவிர வேறொரு குற்றமும் இராசியமாகவோ, வெளிப்படையாகவோ சொல்லப்படவே இல்லை.

(மேலும் இப்போதுதேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இதே பாங்கியில் சில காலம் டைரெக்டராகவும் பல தடவை மூனிசிபல் கவுன்சிலராகவும் மகாஜன ஹைஸ்கூல் காரியதரிசியாகவும் மற்றும் லிமிடெட் பாங்கி வைஸ் பிரசிடெண்டாகவும் சொந்தத்திலேயே ஒரு பாங்காகவும் இருந்து வருவதுடன் ஈரோடு பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரசிடெண்டாகவும் இருந்தவர்.)

மூன்னிருந்த பிரசிடெண்டுக்கும், வைஸ்பிரசிடெண்டுக்கும் இருக்கும் பெருமையெல்லாம் அவர்கள் பார்ப்பனர்கள் என்றும், ஒருவர் வருணச்சிரம தர்ம சபைத்தலைவர் என்றும் மற்றவர் பார்ப்பன தர்ம கர்த்தர் என்றும் சொல்லப்படுவதைத் தவிர மற்றபடி அவர்களைவிட இவர்களுக்கு வேறு விஷேசம் ஒன்றும் சொல்லப்படவேயில்லை.

இந்தக் காரணங்கள் தேர்தல்களுக்கு யோக்கியதா பக்ஷங்களாகக் கவனிக்கப்படுமானால் அவரவர்கள் தங்களாலானவரையில் பார்க்கவேண்டியது நியாயமேயாகும். ஏனெனில் எப்போதாவது இந்தக் கலகம் முடிந்துதானாகவேண்டும். அதை வீணாள் கடத்துவதில் பயனில்லை.

ஆகவே இதைத் தவிர அந்த பாங்கியின் நன்மையை உத்தேசித்தோ அல்லது அந்த கௌரவத்தையை அடைய எல்லாருக்கும் உரிமை உண்டென்பதை உத்தேசித்தோ கவனிக்கப்படுமானால் யாரும் நிர்வாகத்துடன் ஒத்துழையாமை செய்யாமல் அதற்கு முட்டுக்கட்டை போடாமல் அனுகூலமாயிருக்க வேண்டியது நியாயமாகும். பார்ப்பனரல்லாதார் வருகின்ற காலங்களில் எல்லாம் "தகுதிபோதாது" என்று சொல்லிக்கொண்டிருக்கும் காலத்திற்கு இனியோக்கியதை இருக்காது என்றும் கக்ஷிகட்டுவதால் இருவருக்கும் நஷ்டமே தவிர ஒருவர் மாத்திரம் நஷ்டமடைந்து மற்றவர்கள் நஷ்டமில்லாமல் இருந்துவிடலாம் என்றும் கருதுவது ஏமாற்றமாய் முடியுமென்றும் வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

———

ஈ. வெ. இராமசாமி.

———

30-8-31ல் திருவாரூரில் நடைபெறும் இரண்டாவது சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டிற்கு திரு. ஈ. வெ. இராமசாமி, கைவல்யசாமியார் ஆகியவர்கள் 29ந்தேதி இரவு ஈரோட்டைவிட்டுப்புறப்பட்டு 31ந்தேதி வாகனல் திரும்பி வருவார்கள்.

———

இந்தியாவில் நாகரீகமா !!!

(K. R. சுவாமி எழுதுவது)

இந்தியாவானது நாகரீகத்தில்பேர் பெற்றதென்றும், மற்ற காடுகளைப் பார்க்கிலும் நாகரீகத்தில் சிரேஷ்ட மானதென்றும் வெகு காலத்திற்கு முன்னிருந்தே நாகரீகத்தை அடிப் படையாகக் கொண்டுள்ளதென்றும் வாய்பறை சாற்றும் சகோதரி சகோ தரர்களுக்கு நம் இந்திய தேயத்தின் (என்காடடிலும் செய்யாத) சில முக் கிய அநாகரீக செய்கைகளை ஆதாரத் தோடும் தனுபவத்தோடும் எடுத்துக் கூறுகிறேன்:—

மாட்டு சாணமாகிய மேனியின் மீது சாப்பிடுவது, மாட்டின் சாணத் தையும், மூத்திரத்தையும் சாப்பிடு வது, இந்துக்களென்று சொல்லிக் கொள்ளும் உயர்ந்தவன் முதல் தாழ்ந் தவன் ஈறாயில் தேகத்தின் மீது துணியில்லாமலிருப்பது, பிராமணன் பிராமணரல்லாதார் சாப்பாடு, காப்பி ஓட்டல்களிலிருக்கும் வேலைக்காரர் கள் (waiters) தேகத்தின் மீது யா தொரு சட்டையுமில்லாமல் வெறும் உடம்பாகயிருப்பது, வேலை சொ ட்டச்சொட்ட பரிமாறுவது, அக்கு வில் கைப்போட்டு தேய்த்து கை யை முகர்ந்து பார்ப்பது, பல ஜன ங்களின் முன்னிலையில் கோவணத் துக்குள் கையைப்போட்டுவெட்கமில் லாமல் தேய்த்து அதையும் முகர்ந்து பார்ப்பது, மூக்கைசிந்தும் போது அக்கம்பக்கத்திலுள்ளவர்களை அலட் சியம் செய்து குழா ஊதுவதைப் போல், ஊ, ஊ, ஊ, என்று அடிப்ப தினால் அம்மூக்கு நீரான சளி பன் னீரைப்போல் மற்றவர்களின் மீது தெளிப்பது (மூக்கை கைகுட்டையி னால் சிந்தவேண்டும்), மூக்குத் துள் போடுவது, இதனால் எந்நேரமும் சிறு பிள்ளைகளுக்கு சளி ஒழுகுவது போல் ஒழுகிக்கொண்டிருப்பதினால் அதை அடிக்கடி சிந்தி தன்கையிலும்; தலையிலும் துடைத்துக்கொள்ளுவது மல்லாமல் மற்ற பொது ஜனங்கள் பிடிக்கக்கூடிய கைபிடியின் மீது தட விவிடுவது, பலர் முன்னிலையில் மூக் கில் கையை போட்டு வெகுநேரம் நோண்டின பின் அதிலிருந்த அழு க்கை எடுத்து உருட்டிப்பார்ப்பது, ஸ்திரீகளின் மாதவிடாய் நிறைந்திரு க்க கோவிலின் குளங்களில் ஸ்நா னம் செய்வது, தொத்து வியாதியான குஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்ட ஓர் பார்ப்பானை தொட்டுக்கொள்வது, பரிசுத்தமான ஓர் பறையனை தொ டாமலிருப்பது, நமது நாடு நகரங்களி லுள்ள தெருக்கள் சிறுபிள்ளைகளின் மலத்தால் நிறப்பப்பட்டு, வீதிகளில் எந்நேரமும் மலநாற்றம் அடித்துக் கொண்டிருப்பது, கல், மண், செம்பு, பித்தளை இலைகளினால் மனம் போ னபோக்கில் உருவம் செய்து, கடவு ளென்ற மனோபாவனை செய்து அவைகளுக்கு உயிர்ப்பலியிடுவது, உற்சவம், கல்யாண காலங்களில் டம் பத்திற்காக ஆயிரம், லட்சம் கணக் காகபணவிரயம் செய்வது, சுத்காரியங் களில் சமைக்கும் சாப்பாடு மீதியாகி விட்டால் அதை ஏழைகளுக்குப் போ டாமல் பூமியில் புதைப்பது, சோம் பேரி, மடையன், தடியன், கொலை பாதகன், பெண்டாட்டியால் வீட்டை விட்டோடின இவர்கள் சுவாமியார் களாக மாறிவிடுவது, பெண்களும், ஆண்களும், கல், மண் சுவாமிகளு க்கு வேப்பஞ்சிலை கொடுப்பது, திருப் பதி சென்று ஆண்களும், பெண்களும் செற்றி சிறைத்து அவலட்சணமாகத் திரும்புவது, ஆணும், பெண்ணும் காலில் செருப்பில்லாமல் நடப்பது, ஆண்கள்பெண்களுக்குக்கல்வியையும், சுதந்திரத்தையும் கொடாமலிருப்பது, செல்வத்தை மற்றவர்களுக்காக உப போகப்படுத்தாமல் (வியாபாரம் செய் யாமல்) பூமியில் புதைத்து வைப்பது, வியாதிவந்தால் வைத்தியரிடம் போ காமல், கல், மண் சுவாமிக்கும், மந் திரக்காரனுக்கும் பணத்தை வீணில் செலவழித்து விட்டு கடைசியில் மறி ப்பது, சுகாதாரத்தைத்தெரிந்துகொ ள்ளாமல் அந்தகாரத்தில் அழுந்தி சீக் கிரம் இறப்பது, பிணத்திற்கு வெற் றிலை பாக்கு முதலியவற்றையிடித்து வாயில் வைப்பது, ஆண்கள் வெற் றிலை, பாக்கு, புகையிலை முதலியவற் றை வாயில் போட்டு சுண்ணாம்பைப் போல் மென்று துப்புவது, இந்துக் கடவுள்கள், குடிப்பதும், தாசியிடம் போவதும், திருடுவதும், கற்பை அழி ப்பதுமானகாரியங்களைச் செய்வது, பிறப்பினாலும், தொழிலினாலும் உய ர்வு தாழ்வு உண்டென்று ஏமாற்று வது, தாழ்ந்து கிடக்கும் மக்களை முன் ஏற விடாமல் அவர்கள் தலை யை நசுக்குவது, தாழ்ந்தவனின்நிழல் உயர்ந்தவனுக்குத் தீட்டாகமாறுவது, இந்துக்கடவுளர்களுக்குங்கூட தாழ்ந் தவரின் கோவில் பிரவேசம் தீட் டாக மாறுவது, பசுவை பரிசுத்தமெ ன்பதும், அதன் மாமிசத்தைத் தீட் டென்பதும், இ த சாப்பிடும் சில கூட்டத்தாரை பொருமையினால் ஒதுக்கிவைப்பதும், இதே மாமிசத்தை உண்ணும் வெள்ளையர்களை குருவெ ன்றும், கடவுளென்றும் நினைத்து கோவிலுக்குள் இட்டுக் கொண்டி போய் யாவற்றையும் காண்பிப்பது, தெருக்களில் எரியும் எச்சிலை சாப்பா ட்டை எடுத்து சாப்பிடுவது, விஞ் ஞான சாஸ்திரம் பரவும் இம்மெய் ஞான காலத்தில் ராமராஜ்யம் ஸ்தா பிக்க முயல்வது, சிறுபிள்ளைகளுக்கு கலியாணம் செய்து வைப்பது, வித வைகளை மறுகல்யாணம் செய்ய ஒட் டாமல் தடுப்பது, ஆண்கள் மட்டும் பல பெண்களிடம் போவதும், பல கல்யாண முதலாவது செய்துகொ ள்ள சுதந்திரம் பெற்றிருப்பது, ஜாதி வித்தியாசத்தை நழுவவிடாமல் கை யிலும், சிரசிலும் தாங்கியிருப்பது ஆகிய இவைகள் இந்தியாவின் பண் டைய நாகரீகத்திற்கு அறிகுறியா? அல்லது புதுநாகரீகத்திற்கு அறிகுறி யா?

(தொடரும்)

சாரதா சட்டத்தை ஒழிக்க சூழ்ச்சி.

சாரதா சட்டத்தை ஒழிப்பத ற்காக இப்போது தென்னாட்டு ப்பார்ப்பனர்கள் முஸ்லீம்களை தங்களுடன் சேர்த்துக்கொண்டு சூட்சி செய்ய ஆரம்பித்திருக்கி றார்கள். சமீபத்தில் கூடும், சட் டசபைக்கு தஞ்சை, திருச்சி ஜில் லாக்களின் பிரதிநிதியான திரு. கிருஷ்ணமாச்சாரியார் என்னும், பார்ப்பனர் திருநதம் என்னும் பெயரால் ஒரு தீர்மானம அனு ப்பி இருக்கிறாராம். அதில்சாரதா சட்டத்தில் இருந்து முஸ்லீம்க ளையும், பார்ப்பனர்களையும் பிரி த்து விடவேண்டுமென்று குறி ப்பிட்டிருக்கின்றதாம். ஆகவே

"சீர்திருத்தங்களுக்குசர்க்கார ார் முட்டுக்கட்டையாக இருக் கிறார்கள்" என்றுசொல்லும் தே சீய வாதிகள் இதற்கு என்ன பதி ல்சொல்லுவார்களோ தெரியவி ல்லை.

இது ஒரு புறமிருக்கட்டும். இத்திருத்தத்திற்கு சர்க்காரார் இ ணங்கினால்தான் அது நிறைவே ற்கூடுமென்று தெரிய வருவதா ல்சர்க்காரார் இதற்கு இணங்கமா ட்டார்களென்பதோடு ஒடுங்கி லையும் வகிக்காமல் எதிர்த்துத் தோற்கடிப்பார்களென்றே நம்பு கின்றோம்.

ஏனெனில், இந்திய தேசிய வாதிகளால் மகாத்மா என்றும், சத்திய கீர்த்தி என்றும் சொல் லப்படும் லார்ட் இர்வினிடம் முஸ்லீமகளும், பார்ப்பனர்களும் இது விஷயமாய் தூது சென்ற காலத்தில் லார்ட் இர்வின் அவ ர்கள், "சாரதாசட்டம் என்பது மதப்பிரச்சினையிலோ வகுப்புப் பிரச்சினையிலோ பட்டதல்ல. அது பொதுவாகவே மக்கள் வைத்திய சம்பந்தமானதும், சுகாதார சம்பந்தமானதுமாகும். ஆகலால் சர்க்காரார் இதில் மதத் தையும், வகுப்பையும் கருதி ஒரு கூட்டத்திறகு ஒரு மாதிரி, மற் றொரு கூட்டத்திற்கு ஒரு மாதிரி என்பதாகச் செய்ய முடியாது" என்று அப்போதே சொல்லி இருக்கின்றார்.

ஆகவே, இப்போது சர்க்காரார் எந்த விதத்திலும் இதை மதவ குப்புப் பிரச்சினையாகக் கருதி பின் வாங்க முடியாதென்றே கரு துகின்றோம். தவிரவும் அந்தப் படி கருதி ஒரு மதத்தையோ ஒரு வகுப்பையோ அந்தச் சட் டத்தில் இருந்து விலக்குவதா லும் பார்ப்பனர்களைப் போலவே சிறு குழந்தைகளை கல்யாணம் செய்யும் வேறு பல சமூகங்களி ன்கதி என்ன ஆவதென்று கேட்கி ன்றோம். சாதாரணமாக பார்ப் பனர்களைப்பார்த்து காப்பி அடிக் கும் கோமுட்டிகளென்றும், ஆரிய வைசியர்களென்றும், செட் டிகளென்றும், விஸ்வப்பிராமணர் களென்றும் மற்றும்பலவிதமாய்ச் சொல்லிக் கொள்ளக் கூடியவர்க ளானசிறுபெண்களைக் கல்யாணம் செய்யும் வகுப்பார்கள்கதி என்ன வதென்று கேட்கின்றோம். இ ந்த விஷயத்தில் சர்க்காரார் ஏதா வது கோணைத்தனமாகவாவது நாணயத் தவறுதலாகவாவது நடந்தால் சர்க்காருக்குப் புத்தி கற்பிக்க வேண்டியது சீர்திரு த்த வாதிகளது முக்கியக்கடமை யாகுமென்பதை நாம் அழுத்த மாகச் சொல்லுகின்றோம். தவி ராவும், முஸ்லீம்கள் இத்தச் சட் டத்தை எதிர்ப்ப தென்பது சிறி தும் அறிவுடைமையாகாது என் பதுடன் அதுவும் மதத்தின் பே ரால் எதிர்ப்பதென்பது தங் கள் மதம் பகுத்தறிவுக் கேற்ற தென்று சொல்லக் கூடியவர்கள் வெட்கப்பட வேண்டியதுமாகு மென்றே சொல்லுவோம்.

வேறு காரணங்களை மனதில் வைத்துக்கொண்டு அதற்காக மதத்தைக் கொண்டு பொறுப்பா க்குவதும் அதன் மறைவில் நிற் கப் பார்ப்பதும் மதத்தை இழிவு படுத்துவதேயாகும். ஆகையால் சென்னை மகாண முஸ்லீம் கண் பர்கள், வைசிராய் அவர்களுக்கு முஸ்லீம்கள் போல் சாரதா சட் டத்திருத்தப் பிரேரேபனையை எதிர்த்துத் தந்திகொடுப்பதுடன் ஆங்காங்குள்ள சீர் திருத்தவாதிக ளும், தனிப்பட்ட முறையிலும், சமுதாயமுறையிலும் திருத்தப் பிரேரேபனையைக் கண்டித்து த்தந்திகள் அனுப்ப வேண்டு மாய் விரும்புகின்றோம். திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இத்திருத்தம் நிறைவேறாமல் பா ர்த்துக்கொள்ள வேண்டியது முக்கியக்கடமையாகும்என்பதை யும் தெரிவித்துக் கொள்ளுகின் றோம்.

திருச்சி, தஞ்சை ஓட்டர்கள் திரு. கிருஷ்ணமாச்சாரியாரை இந்தியா சட்டசபைக்குத் தெரி ந்தெடுத்ததிற்கு வெட்கப்பட்டு இனியாவது மானத்துடன் நட ந்து கொள்வார்களென்று எதிர் பார்க்கின்றோம்.

கலப்புமணத்தால் ஜாதி ஒழியும்.

குடி அரசு

ஈரோடு 1931 ஆகஸ்டு 30உ

பயமுறுத்தல் கடிதங்கள்.

அன்பர் திரு. ஜார்ஜ் ஜோசப் அவர்களை காங்கிரஸ் "பக்தர்" களில் யாரோ ஒருவர் வெட்டிப் புதைத்து விடுவதாய் அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும் அது திரு. ஜோசப் அவாது மனைவியாரால் போலீசில் ஒப்புவிக்கப்பட்டதாகவும் பத்திரிகையில் பார்த்தோம்.

இக்கடிதம் எழுதக் காரணம் 'குடி அர'சில் வாரவாரம் வெளியான திரு. ஜோசப் அவர்களின் "காந்தியின் இராமராஜியம்" என்பதுபற்றிய வியாசங்களின் காரணமாகவே இருக்கலாம். இருந்தாலும்,

இம்மாதிரி கடிதம் நமக்கும் பல வந்து கொண்டிருக்கின்றன. நண்பர்கள் திரு.எ.இராமசாமி முதலியார், திரு. பி. வரதராஜுலு நாயுடு ஆகியவர்களுக்கும் பல வந்ததாக நாம் சென்னையில் இருக்கும்போது பத்திரிகைகளில்பார்த்தோம். நமக்கு வந்த கடிதங்கள் 100க்கு மேற்பட்டதாகும். வசவு கடிதங்கள் வர்ணிக்க முடியாத கருத்துக்களால் எழுதப்பட்டவைகளும் இரத்தத்தினால் தோய்த்து கையெழுத்துப்போடப்பட்டவைகளும் ஆபாசமான சித்திரம் எழுதிக் காட்டியவைகளுமாக அநேக கடிதங்களுண்டு. இவை பெரிதும் பார்ப்பனர்களால் எழுதப்பட்டவைகள் என்று கருதக் கூடியவைகளானாலும் சில பார்ப்பனர்களல்லாத வாலிபர்களாலும் இருக்கலாம். ஒன்றிரண்டு மதப்பைத்தியம் [அதுவும் சைவமதப்பைத்தியம்)காரணமாகவேயிருக்கலாம் என்றும் எண்ணக்கூடியவைகளாகும்

இவைகள் எல்லாமுமே நம்மை அவர்கள் [எழுதினவர்கள்] கொல்லவேண்டும் என்கின்ற எண்ணத்தின்மீதோ அல்லது கொன்று விடலாம் என்கின்ற தைரியத்தின் மீதோ எழுதப்பட்டவைகள் அல்ல என்பதுதான் நமது அப்போதையதும் இப்போதையதுமான அபிப்பிராயமுமாகும்.

ஆனால் நம் பேரிலுள்ள கோபத்தின் வேகம் அந்த வழியில் [அந்தப்படி ஒரு கடிதம் எழுதி] ஒரு விதம் தணித்துக்கொள்ளப்பட்டது என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். ஏனெனில் நமது நடவடிக்கைகள் அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரத்தைக்கொடுக்கின்றது என்பதாக தெரிகின்றது. அதற்கு யார் என்ன செய்யக்கூடும்?

கொன்று விடுவதாக எழுதின வீரனுடைய வீரத்தனத்திற்கு பயமுறுத்தப் பட்டவர்களுடைய வீரம் சிறிதாவது குறைந்து இருந்தால் அவர்கள் தங்களது குரலைக்கொஞ்சம் தளர்த்தியிருக்கலாம்,—பேனாவை சற்று குறுக்கியிருக்கலாம்—சரீரத்தைச் சற்று மறைத்தாவதிருக்கலாம்.

ஒருவனைக் கொல்வதின் மூலம் ஒருவன் வீரனைப்பார்ப்பதுபோலவே ஒருவனால் கொல்லப்படுவதின் மூலமும் ஒருவன் வீரனைப்பார்க்க உரிமையுண்டு—வழியுண்டு என்பதையாரும் மறுக்க முடியாது.

எப்படியெனில் சாமி சித்தானந்தாவைக்கொன்றவன் தனது "வீரத்தினாலேயே கொன்று வீரனென்" என்று வைத்துக் கொண்டாலும் கொல்லப்பட்ட சித்தானந்தரும் வீராதிவீரராகாமல் போகவில்லை.

பகத்சிங்கை தூக்கிவிட்டு சர்க்காருக்குக் கிடைத்த வீரப்பட்டத்திற்குச் சிறிதும் குறைந்ததல்ல பகத்சிங்குக்குக் கிடைத்த வீரப்பட்டம்.

உண்மையிலேயே ஒரு மனிதனுடைய லட்சியத்திற்கு வெற்றி ஏற்படவேண்டும் என்று கருதுகின்ற மனிதனுக்கு அவன் ஆசை நிறைவேறவேண்டுமானால் அந்த லட்சியத்திற்கு அவனது உயிரைக்கொடுத்ததாய் அதாவது அந்த லட்சியத்தின் பயனுக்கு அவனது உயிர் இழக்கப்பட்டதாய் ஏற்பட்டால் அது உண்மையில் பயனளிக்கக்கூடியதேயாகும்.

ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் சாவு உறுதி. அந்த சாவு 1000ல் 999 நோயிக்கும் அகஸ்மாத்தான சம்பவத்திற்கும் தன்னை அறியாமலும் தான் பறிகொடுக்கப் படத்தக்கதாய் நடைபெற்று வருகின்றனவே தவிர ஒரு மனிதன் தனது சாவை தக்க விலைக்குக் கொடுத்ததாகக் காணப்படுவது மிக்க அரிதாகவேயிருக்கின்றது.

பகத்சிங் காரியம் சரியா? தப்பா? என்பது சிலருக்காவது விவகாரத்திற் கிடமானதாயிருந்தாலும் அவரது சாவு அவரது லட்சியத்திற்குத்தக்க பயனளித்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அது போலவே காங்கிரஸ்லட்சியத்திலோ மத லட்சியத்திலோ நம்பிக்கை இருக்கின்றவர்கள் தங்களது சாவை தக்க விலைக்கு பயன்படுத்துவது என்று கருதிய முடிவினால் ஒருவனைக்கொல்ல எண்ணுவதில் எதாவது குற்றமிருக்கின்றதென்று நாம் சிறிதும் கருதமாட்டோம். அதாவது தமது லட்சியத்திற்கு விரோதமானவன்—தடையானவன் என்று கருதப்படுகின்றவனை சாகடிப்பதின் மூலம் தனது சாவை பயன்படுத்தலாம் என்று எண்ணுவதில் இயற்கைக்கு விரோதம், அனுபவத்திற்கு விரோதம், ஞாயத்திற்கு விரோதம் இருப்பதாகக்காணமுடியவில்லை.

அதுபோலவே சாகடிக்கப்படுகின்றவனும் தனது லட்சியத்திற்காக அந்த லட்சியம் கைகூடுவதால் யாரொருவர் கஷ்டமடையக்கூடியவரோ, கஷ்டமடையக்கூடியவரோ அல்லது லட்சியமே நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதல்ல வென்றோ கருதப்படுபவரோ ஆகியவர்களால் சாகடிக்கப்படநேருவதிலும் அதிசயமோ இயற்கைக்கு விரோதமோ, நடப்பிற்கு விரோதமோ நியாயத்திற்கு விரோதமோ இருப்பதாய் கருதவும் முடியவில்லை.

எந்த மனிதனுவது தனது லட்சியத்தைப் பிரதானமாய்க்கருதி அதற்கே உழைத்துத்தீரவேண்டுமென்று முடிவுகட்டிக்கொண்டு இருப்பானேயானால் அவன் அதற்காக உயிரை இழக்க நேருவதுதான் அவனது லட்சியத்தில் அவனுக்குள்ள உறுதியையும் அவன் அடையவேண்டிய வெற்றியையும் காட்டுவதாகும். அதோடு அந்த லட்சியத்திற்கும் அவன் செய்ய வேண்டிய எல்லாவேலைகளையும் செய்துவிட்டதான தனது கடமையையும் நிறைவேற்றியதாகும்.

அன்றியும் லக்ஷியக்காரன் உயிருடன் இருந்து லக்ஷியத்திற்காக பாடுபட்டுக் கொண்டிருப்பதில் எவ்வளவு பயன் ஏற்படுமோ அதைவிட கண்டிப்பாய் பலமடங்கதிகமான பலனும் ஏற்படக்கூடும். அறிவாளிகளின் வேலையும் அதுவேயாகும்.

ஆதலால் சாவுக்கு பயந்து யாரும் தங்கள் லக்ஷியங்களின் வேகத்தை சிறிதும் குறைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகவே இதை எழுதினேம்.

தவிர 'நான்செத்துப்போனால் என் பெண்டுபிள்ளை என்னகதியாகும்'? என்கின்ற ஒரு மனப்பான்மை தான் இந்தியர்களை சுயமரியாதை யற்ற கோழைகளாக்கிவைத்து கொண்டு வந்திருக்கின்றது. இந்தமனப்பான்மை இந்தியாவில்தான் அதிகம்உண்டு. சௌகரியமிருப்பவன் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்கும் போதே பெண்டுபிள்ளைகளது உயிர்வாழ்க்கைக்கு ஏதாவது செய்துவிடவேண்டியது அறிவுடைமையாகும். சௌகரியமில்லாதவன் அதற்காகவே உயிர்வாழவேண்டும் என்று கருதுவானேயானால் அப்படிப்பட்டவன் தயவுசெய்து இம்மாதிரியான அதாவது பொது நல காரியங்களில் பிரவேசிக்காமல் இருப்பதே நலமாகும். ஏனெனில், இம்மாதிரி லட்சியக்காரர்களாலேயே அதாவது 'பெண்டுபிள்ளைகளைக்காப்பாற்ற இருக்கின்றோம். அவர்களைக்காப்பாற்ற வேண்டியது நமது லக்ஷியம் அல்லதுகடமை' என்று கருதிக் கொண்டிருக்கிறவர்கள் பொதுக்காரியங்களில் பிரவேசிப்பதாலேயே உண்மையான லட்சியங்கள்—பொதுக் காரியங்கள் பாழாகின்றன. அன்றியும் அவர்களுடைய பொதுநல சேவையும் நாணயக் குறைவானது—ஏமாற்றுகானதும் என்று கருதப்பட வேண்டியதுமாகிவிடுகின்றன. ஆகையால் அதைப்பற்றி யாரும் கவலைப்படக்கூடாது. நிற்க இந்தப்படி நாம் எழுதுவதில் லக்ஷியத்திற்காக ஒருவனை சாகடிப்பது அல்லது ஒருவன் சாவதுகன்கின்ற இரண்டு காரியங்களையும் நாம் ஒன்றுகவே கருதி இருப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். சுயமரியாதை இயக்கத்தை பொறுத்தவரையில் அதன் லக்ஷியம் நிறைவேற ஒருவனை சாகடிப்பதைவிட லட்சியத்தின் எதிரி ஒருவனால்சாவதே மேல்என்றுதான் இன்றுகருதுகின்றோம். எனெனில் செத்தவனை இருவரும் போற்றுவார்கள். செத்தவனிடத்தில் இருகூட்டத்தாரும் அனுதாபம் காட்டுவார்கள். அதன்மூலம் லட்சியத்திற்கு ஆக்கம் ஏற்படும். சாகடித்தவனை ஒரு கூட்டம்தான் போற்றலாம். அதுவும்தைரியமாய்வெளிப்படையாய் போற்றமாட்டார்கள். அதிலிருந்தே எதிர்ப்பின் ஆக்கமும் குன்றலாம். அதுவும் தவிர கொல்லுபவன் ஒளிந்திருந்து பயந்து வேலைசெய்யவேண்டும்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கொல்லப்படுபவன் தைரியமாய் வெளிப்படையாய் இருந்து உயிர்கொடுக்கலாம். மற்றும் சில நன்மைகள் உண்டு. ஆதலால் சாவுக்கு தணிந்து லட்சியங்களை மாற்றிக்கொள்ளாமல் இருக்கவேண்டியது உண்மை லட்சியக்கார மனிதனின் கடமை என்பதை வலியுறுத்துகின்றோம்.

திரு ஜோசப் அவர்களின் மனைவியார் அக்கடிதத்திற்குப் பயந்தது பெண்கள் உலகத்திற்கே ஒரு 'மாசு' என்றுதான் சொல்லுவோம். அவ்வம்மையார் தனது புருஷன் கொல்லப்பட்டுவிட்டால் 'ராட்டினமசுற்றி' பிள்ளைகுட்டிகளைக்காப்பாற்ற வேண்டுமே என்று பயந்திருக்கலாமோ அல்லது தனது வாழ்க்கையின் மேன்மைகுன்றிவிடுமேன்று பயந்திருக்கலாமோ என்று நாம் நினைக்கவில்லை. ஆனாலும் தமது அன்புள்ள காதலன் பிரிந்துவிட்டால் என்ன செய்வது என்று காதலி உத்தேசித்து பயந்திருக்கலாம் என்றே கருதினாலும் அதுவும் சரியில்ல என்றேசொல்லுவோம். தனது காதலனுக்கு அவரது லட்சியத்திற்காக அவரது உயிரைக்கொடுக்க நேர்ந்தது என்னும் ஒரு மேன்மையும் அவரது லட்சியம் நிறைவேறுவதற்கு அனுகூலமாக அது பண்பட்ட லாபத்தைவிட காதலனை இழந்து விட்ட நஷ்டம் சிறிதும் அதிகமல்ல என்றே சொல்லுவோம். சாப்பாட்டிற்கு எதாவது ஒரு வழிவேண்டுமானால் பள்ளிக்கூட உபாத்தியாயராகலாம். முடியாவிட்டால் சரீரத்தில வலுவிருக்கின்றவரை ரோட்டில் கல் உடைக்கலாம். மற்றபடி தனக்கு வேண்டிய பெருமையையோ கௌரதையைப்பற்றியோ யோசிப்பதானலும் இந்தக்காரணங்களால் அம்மையாரின் கௌரவத்திற்கு எவ்வித குறைவும் ஏற்பட்டுவிடாதென்றே தைரியமாய்ச்சொல்லுவோம், சொல்லுவோம்.

திரு ஜார்ஜ் ஜோசப் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபிறகோ வெட்டிப்புதைக்கப்பட்டபிறகோ திருமதி ஜோசப் அம்மையாருக்கு மாஜி முதல் மந்திரியான டாக்டர் சுப்பராயன் அவர்களது மனைவியாருக்கும் இப்போதைய முதல் மந்திரியான திவான்பகதூர் முனுசாமி நாயுடு அவர்களது மனைவியாருக்கும் இந்திய நிர்வாக சபை சட்டமெம்பரான சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களது மனைவியாருக்கும் இந்நாட்டில் உள்ள கௌரதையில்-பெருமையில்-தன் மதிப்பில் அனேக பாகம் அதிகமாகத்தான் இருக்குமே தவிர எள்ளளவாவது சிறிதாயிருக்கும் என்று கருதுவதற்கு இடமிருக்காது என்று உறுதியாய்ச்சொல்லுவோம். ஆகையால் அம்மையார் பயப்படாமல் தனது காதலனை அலங்கரித்து யுத்தகளத்திற்குத் தைரியமாய் நல்லதொரு பேனுவைக்கையில் கொடுத்து 'எனக்காகக்கவலைப் படவேண்டாம்' என்று சொல்லி அனுப்பிக்கொடுக்கவேணு மாய்ப்பிரார்த்திக்கின்றோம்.

காந்தியின் யாத்திரை.

போனலென்ன? போகாவிட்டாலென்ன?

உயர்திரு. காந்தியவர்கள் இங்கிலாந்து போகும் விஷயமாய் போகாமல்தப்பித்துக்கொள்ளமுயற்சித்துச் சர்க்காரார்மீது எவ்வளவோ குற்றப் பத்திரிகை வாசித்துப்பார்த்தும் கடைசியாக இப்போது அநதப்பிரச்சினையானது ஒன்று,'போய்த்தீரவேண்டியது' அல்லது தாம்குற்றவாளியாகவேண்டியது' என்கின்ற நிலைமைக்கு வந்துவிட்டதால் போவதா? இல்லையா? என்பதுஒவ்வொருவீடியும் ஒரு பெரிய விடுகதையாகவே இருந்துவந்தது.

திரு. காந்தியவர்கள் சர்க்காரார்மீது ஒருவண்டி குற்றங்கள் சுமத்தி நீண்ட தொரு குற்றப்பத்திரிகை படித்தார். ஆனால் சர். சி. பி. இராமசாமி அய்யரை சட்ட மந்திரியாகக்கொண்ட சர்க்காரார் அவ்வளவுக்கும் ஒரே அடியில் பதில் சொல்லி குற்றப்பத்திரிகை ஏற்படுத்தினவர்களை நடுங்கச் செய்துவிட்டார்கள். அதன் சுருக்கமாவது:—

'திரு.காந்தியவர்களே! நீங்கள் சாட்டிய குற்றப்பத்திரிகையை சர்க்காரார் ஒப்புக்கொள்ள முடியாது. காங்கிரஸ ஒப்பந்தத்தை மீறிதப்பு செய்து வந்திருப்பவைகளை சர்க்காரார் அவ்வப்போது உங்களுக்கு எடுத்துக்காட்டி வந்திருக்கின்ற விபரம் தங்களுக்கே தெரிந்ததாகும்.

'காங்கிரஸ் செய்த தப்பிதங்களுக்கு பதிலுக்கு பதில் செய்யாமல் சர்க்காரார் சாதாரணசட்டத்தின்படியே நடவடிக்கைகள் நடத்தி அவைகளை சமாளித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒப்பந்தத்தில்காணப்படாதபல விஷயங்களில் கூடசர்க்காரார் உங்களுக்காக வேண்டியே இணங்கி வந்திருக்கின்றார்கள் என்பதும் உங்களுக்கேதெரியும்.

'லண்டன் மகாநாட்டுக்கு போவதை மறுப்பதானது ஒப்பந்தத்தின் பிரதானமான கொள்கையை பாழ்படுத்துவதாகும் என்பதை உணருங்கள்.

'ஒப்பந்தத்தில் சாதாரண சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதை நிறுத்திவைக்க நிபந்தனை கிடையாது என்பதையும் உணருங்கள்.தனிப்பட்டசம்பவங்களையும் நிலைமையையும் சமாளிக்கஒப்பந்தப்படிசர்க்காருக்கு எப்பொழுதும் உரிமை உண்டு.

'இதுவரைசர்க்காரார்கூடுமானவரை பொருமையுடனேயேஇருந்து வருகின்றார்கள். இனியும் இருக்க முயற்சிக்கின்றார்கள்.

'ஆனால் அத்தப்படி இனியும் சர்க்காரார் பொருமையாயிருந்து வருவது என்பது காங்கிரசின் நடவடிக்கையைப் பொறுத்தது என்பதை உணருங்கள். எப்போதும் பொருமையாகவே இருப்போம் என்று சர்க்காரார் உறுதி கூற முடியாது'

என்பதாக பதில்தெரிவித்து விட்டார்கள்.

இதன் பிறகுதான் காங்கிரஸ்காரர்கள் வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது-தப்பித்துக்கொள்ள முடியாத நிபந்தனையாகப் பாவிக்கவேண்டியதாகி விட்டது.

திரு. காந்தியவர்கள் நிலைமை "போனலும் கஷ்டம் போகாவிட்டாலும் கஷ்டம்" என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டது. போகாமல் இருப்பதில் இரண்டு விதகஷ்டங்கள்.போவதால் ஒருவிதகஷ்டம். அதாவதுபோவதால்காங்கிரசின் குட்டு வெளியாவதுடன் போய்விடும். போகாவிட்டால் பழையபடி கிளர்ச்சித்தொல்லையை இழுத்துப்போட்டுக் கொள்ளவேண்டியிருப்பதுடன் "உலகத்தின் முன்பாக காங்கிரசின் நாணயம் வெளுத்துப்போகும்" என்கின்றஇரண்டுகஷ்டங்களுக்கு ஆளாகின்றன.

ஆகவே எதாவது ஒரு வகையில் சர்க்காரார் மீது குற்றம் சுமத்தி போகாமல் இருக்கவே முயற்சித்துப் பார்த்தும அது வெற்றி பெற இடமில்லாமல் போனதால் ஒரு மொண்டிச் சாக்கையாவது வைத்து போய் விட்டே வரலாம் என்று முடிவு செய்ய வேண்டியநிலைமைதிரு காந்திக்கு ஏற்பட்டுவிட்டது. சர்க்காரார் அதற்கும் இடம்கொடுக்காமலிருந்ததால் ஒப்பந்தநிபந்தனை சம்பந்தமானபிரச்சினைகளைவிட 'ஏதோ ஒருபஞ்சாயத்துக்கு ஒப்புக்கொண்டால் போதும், நான் போகத் தயாராயிருக்கின்றேன்" என்று சொல்லவேண்டியதாகி விட்டது. அதாவது இந்த பஞ்சாயத்தானது செய்யும் முடிவுக்கும் "நான் லண்டன் போவதற்கும் எவ்விதசம்பந்தமுமில்லை. எப்படியாவது பஞ்சாயத்துக்கு ஒப்புக்கொண்டால் இப்போதே போய்விடுகிறேன் பிறகு நீங்கள் எப்போதோயாரையோபஞ்சாயத்தையமித்து என்னமோசெய்து கொள்ளுங்கள்' என்கின்ற நிபந்தனையின் மேல் போவதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய் தெரிகின்றது. ஆகவே லண்டன் போவது ஒப்பந்தப்படி அவசியம் என்பதாக உணர்ந்துவிட்டார் என்றே ஊகிக்கவேண்டியதாய் இருக்கிறது. எப்படி இருந்தாலும் லண்டன் மகாநாட்டால் இந்தியாவுக்கு அரசியல் சம்பந்தமான நன்மை ஒன்றும் ஏற்படப் போவதில்லை. அதாவது,

இப்போதையவரி குறையாது.
உத்தியோகம் குறையாது.
உத்தியோகக்கொள்ளை குறையாது.
பார்ப்பனீயக் கொடுமை சூழ்ச்சி குறையாது.
பணக்கார ஆதிக்கம் குறையாது.

படிப்பு என்னும் போல் சோம்பேரிகள் வாழ்க்கையும் அவர்களது கொள்ளையும் பொறுப்பற்றவர்கள் கைக்களுக்குப்போகும் அரசியல் ஆதிக்கமும் குறையாது. இவைகளுக்குப் பதிலாக அவைகள் அதிகப்படலாம்.

சரீரத்தால் பாடுபடும் தொழிலாளிகளுக்கு எவ்விதத்திலும் கஷ்டம் குறையாது.

வேண்டுமானால் தீண்டாதவர்களுக்கும் பெண்களுக்கும் முன்னேற்றமேற்பட சற்று மார்க்கமுண்டாகலாம்.

இதற்கும் காங்கிரசும் பார்ப்பனர்களும் மூட்டுக்கட்டை போடாமல் இருந்தால் தான்-திரு காந்தியவர்கள் வருணாச்சிரம மூட்டையை வட்டமேஜையில் அவிழ்க்காதிருந்தால் தான் முடியும்.

நிற்க திரு காந்தியவர்கள் லண்டன் சென்றதாலேயே கடைசிவரை இருந்து "காரியம் ஏதோ ஒருவிஷயத்தில் சமாதானமாக முடிந்தது" என்

முத்தையா
லக அறக்கட்டளை

விருதுநகர்மகாநாடு

மதநடுநிலைமைக் கொள்கை கண்டனத் தீர்மானம்.

III.

விருதுநகர் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களில் மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானத்தைப்பற்றி சென்ற வாரம் விளக்கி இருந்தோம்.

கின்றநிலைமையை ஏற்பட இடங் கொடுப்பார் என்று நம்புவதும் பிசகேயாகும்.

ஏனெனில் "அதற்குப்பிறகு காங்கிரசுகாரருக்குவேலை என்னஎன்பது ஒருபெரிய விடுகதையாகும் இன்றைய நிலைமையில் "வட்டமேஜை மகாநாடுமூடிவுப்படி ஒரு திட்டம் ஏற்பட்டுவிட்டது" என்றுவைத்துக்கொண்டாலும் அதன் பயனுய் ஏற்படும் உத்தியோகங்கள் காங்கிரசுக்காரர்களுக்கு கிடைத்துவிடும் என்று சொல்லிவிடமுடியாது. எங்கு எப்படியானலும் தென்னாட்டில் கண்டிப்பாய் கிடைக்கவே மாட்டாது.

ஆதலால் தென்னாட்டுப்பார்ப்பனர்களுக்கும் தேசியத்தின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கும் வேறு ஒருவழி வேண்டியது அவசியமேயாகும்.

தவிரவும் காங்கிரஸ் அடங்கியவுடன் இனிப்புறப்படப் போகும் கிளர்ச்சி சமதர்மக்கிளர்ச்சியேயாகும். இதில் திரு காந்தியும் சேரமுடியாது. சேர்ந்தாலும் அவருக்கும் மதிப்பு இருக்காது என்பதுடன் அவர் கலந்த கிளர்ச்சியும் நாணயமானதாய்க் கருதப்படாததாய்போய் விடலாம். பிறகு பணக்காரன், மில் முதலாளி, படித்த ஆட்கள் ஆகிய இந்தக்கூட்டமும் இதில் சேரமுடியாது. இவ்வளவும் தவிர தென்னாட்டுப்பார்ப் பனர்கள் அதன் கிட்டக்கூடவரமுடியாது. ஆகவே இவர்களுக்கெல்லாம் உலகத்தில் இடம்வேண்டுமானால் காங்கிரசின் கிளர்ச்சிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டாவது உயிர்வைத்திருக்க வேண்டியது திரு காந்தியின் கடமையாகும். ஆதலால் ஏதாவது ஒருசாக்கைச்சொல்லிக்கொண்டு வருணச்சிரமத்திற்கு மோசமில்லாமல் பார்த்து விட்டு திரு காந்தியவர்கள் ஓடிவந்துவிட வேண்டியவரேயாவார்.

இவ்வாரம் மத நடுநிலைமை கொண்ட ஸ்தாபனங்களே மறுத்தும் மத நடுநிலைமைகொள்கையைக்கண்டனம் செய்தும் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தைப் பற்றி சற்று விளக்குவோம்.

தீர்மானமாவது:—

"சமுதாய முற்போக்குகள் ஏற்படுவதற்கு ஆன முயற்சிகள் செய்யப்படும்போதெல்லாம் 'மதம்போச்சு மதம் போச்சு' என்று பிற்போக்காளர்கள் கூப்பாடு போட்டுக்கொண்டே முட்டுக்கட்டையாய் இருந்து வருவதால் அரசாங்கத்தார் அனுசரித்து வரும் மத நடுநிலைமையை கண்டிப்பதோடு அதை ஆதரிக்கும் எந்த அரசியல் ஸ்தாபனங்களையும் ஒப்புக்கொள்ள முடியாது என்பதாக இந்த மகாநாடு தீர்மானிக்கிறது" என்பதாகும். அதுபோலவே "வர்ணச்சிரம தர்மத்தை ஒப்புக்கொள்ளும் எந்த அரசியல் ஸ்தாபனத்தையும் ஒப்புக் கொள்ள முடியாது" என்பதுமாகும்.

இவை காங்கிரசையும், திரு. காந்தியையும் கண்டித்து செய்யப்பட்ட தீர்மானம் என்றே சொல்லலாம். ஏனெனில் மத நடுநிலைமையை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளுகின்றது. வருணச்சிரம தர்மத்தை திரு. காந்தியவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார். ஆகவே இவ்விரு கொள்கைகளும் அவைகளை ஒப்புக்கொள்ளும் ஸ்தாபனங்களும் கண்டிக்கப்படுமானால் மேல்கண்டபடி காங்கிரசும், திரு. காந்தியும் கண்டிக்கப்பட்டவர்களே யாவார்கள்.

இப்பொழுதாவது பொது ஜனங்கள் சுயமரியாதைக் காரர்கள் ஏன் காங்கிரசை, காந்தியை கண்டிக்கின்றார்கள்? என்பதை உணர வேண்டுகின்றோம். மதநடுநிலைமையை ஒப்புக்கொண்டால் மதக்கொள்கைகளில் யாரும் பிரவேசிக்கவே கூடாது என்பதுதான் அதன் தத்துவமாகும். ஆகவே இந்தத் தத்துவம்காப்பாற்றப்பட வேண்டும என்பதை ஒப்புக்கொண்டோமே யானால் மதக்கொள்கைகள் மத சம்பந்தமான கட்டளைகள், மத சம்பந்தமான விதிகள் என்பவைகளில் யாரும் பிரவேசிக்கக்கூடாது என்பதை நாம் ஒப்புக்கொண்டதாகவே ஆகும். அப்படியானால் இன்றைய நிலைமையில் மனித தர்மத்திற்கு ஏற்ற எவ்வித சீர்திருத்தத்தையும் செய்யக்கூடாது என்பதாகத்தான் முடியும்.

ஒரு சிறு சீர்திருத்தம் கொண்டுவருகின்ற காலத்திலும், சீர்திருத்த விரோதிகள் எழுந்து நின்று "வந்து விட்டது மதத்திற்கு ஆபத்து" "மதம் போச்சுது மதம் போச்சுது" என்று கூப்பாடு போட்டால் இந்த நிலைமையில் சீர்திருத்தக்காரர்கள் என்ன செய்ய முடியும்? என்பதை யோசித்துப்பாருங்கள். ஏறக்குறைய பிரிட்டிஷ் அரசாங்கம் வந்து 150 வருஷகாலமாகியும் இனியும் சரியான சீர்திருத்தங்கள் ஏற்படாததற்கு இந்த மத நடுநிலைமை யென்பதே முக்கிய தடங்கலாயிருந்து வந்திருக்கின்றதுஎன்பதுடன்சர்க்காரும் சில சமயங்களில் அதன் நிழலில் ஒளிந்துகொண்டு தப்புவித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்பதையும் பிரதியக்ஷத்தில் பார்த்து வருகின்றோம்.

ஆகவே இந்த மத நடுநிலைமைக்கொள்கையை இந்திய காங்கிரசும் இந்திய அரசியல் வட்டமேஜை மகாநாடும் ஒப்புக்கொள்ளுமானால் அக்கொள்கைகளின் கீழ் எவ்வித சீர்திருத்தத்தை எதிர்பார்க்க முடியும் என்பதை யோசித்தால் அக்கொள்கையினால் ஏற்படும் ஆபத்து விளங்காமல் போகாது. காங்கிரசு இந்த மத நடுநிலைமையை ஒப்புக்கொள்ளுவதாலேயேதான் காங்கிரசை நாம் வைதீகத்தை—பார்ப்பனீயத்தை காப்பாற்றும் ஸ்தாபனம் என்று கூறுகின்றோம். இதை மறுப்பதற்கு யாரிடம என்ன ஆதாரம் இருக்கின்றது? என்றும் கேட்கின்றோம்.

விவாக சம்பந்தமான—ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வை நீக்கும்படியான பல அரிய தீர்மானங்கள் சட்டசபைகளுக்கு வந்தும் அவை தோல்வி அடைந்ததற்கு என்ன காரணம்? என்றும், இன்னும் சாதாரண விஷயங்களுக்கெல்லாம் மத நடுநிலைமை என்று வைதீர்கள் கூப்பாடு போடுவதற்கு என்னகாரணம்? என்றும் வாசகர்களை கேட்கின்றோம். தவிர இத்தீர்மானத்தை எதிர்க்கின்றவர்களில் சிலர்,

"இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் ஏற்படுகின்றபிரச்சினைகளுக்குமாத்திரம்தான் இந்த நிபந்தனையே யொழிய மற்றபடி இந்துக்களுக்குள்ளாக நடக்கவேண்டிய சீர்திருத்தங்களுக்கு இது கட்டுப்படாது" என்று சொல்லிப் பாமர மக்கள் கண்களில் மண்ணை வாரிப் போடப் பார்க்கின்றார்கள்.

மதநடு நிலைமை என்கின்ற பேச்சை முஸ்லீம்களோ, கிறிஸ்துவர்களோ உபயோகிப்பது ஒரு தடவையானால் அந்தக்காலத்திற்குள் இந்துக்கள் 100 தடவை உபயோகித்து வருகின்றார்கள். தேவஸ்தான பரிபாலன சட்டத்தின் போது மதநடு நிலைமை வந்து புகுந்து அந்த சட்டமே குப்பைத்தொட்டியில் கிடப்பதற்கும் லாயக்கில்லாததாய்ப்போய் சிலர் கொள்ளை அடிப்பதற்கு மாத்திரம்தான் அது பயன்படக்கூடியதாகிவிட்டது.

மதபரிபாலனச் சட்டம் என்னும் தேவஸ்தானச் சட்டம் ஏற்படுவதற்கு முன்பு தேவாலயங்களுக்குள் சென்றுவந்த வாணியர் முதலிய ஜாதியாருக்குச் சட்டம் ஏற்பட்டபின்பு உள்ளே போகயோக்கியதை இல்லாமல் போய்விட்டதுடன் இவ்விஷயத்தில் வெகு தைரியமாய் மனுதர்ம சாஸ்திரத்தை எடுத்து, கோர்ட் செய்து தீர்ப்பு எழுதப்பட்டுமாய் விட்டது. இத மத நடுநிலைமை காரணமாகவே சாரதா சட்டமும் இன்று உயிருக்கே ஊஞ்சலாடிக்கொண்டிருக்க வேண்டியதாகிவிட்டது. இவைகளை எல்லாம் அற்பமான காரியங்கள் என்று சொல்லி ஏமாற்றி விடமுடியாது.

மற்றும், பெண்களுக்குச்சொத்துரிமை வேண்டும்.

தீண்டாதவர்களுக்குத் தீண்டாமை போகவேண்டும்.

என்று நாம் தீர்மானங்கள் சட்டசபைகளுக்குக்கொண்டுபோனோமேயானால் மதநடு நிலைமை கொள்கையுடைய அரசாங்கத்தாரால் முதலாவதாகத் தீர்மானம் அனுமதிக்கப்படுமா? என்பதை யோசித்துப் பாருங்கள். அரசியல் சம்பந்தமான மூட நம்பிக்கை இல்லாத பகுத்தறிவு உள்ளவர்களுக்கு இவை விளங்காமல் போகவே போகாது. வேண்டுமென்றே பேசுகின்றவர்களுக்கு மாத்திரம் விளங்குவது சிறிது கஷ்டமாகும்.

ஆகவே சமதர்மத்தை விரும்புகின்ற மக்களுக்கு மதநடுநிலைமை கொண்ட ஒரு அரசியல் ஸ்தாபனம் ஒரு பெரும் முட்டுக்கட்டையேயாகும்.

அதுபோலவே வருணச்சிரம தர்மத்தை ஆதரிக்கும் விஷயமுமானதால் அதைப்பற்றி அநேகதடவைகள்எழுதப்பட்டிருப்பதால் இதில் அதிகம் எழுதவில்லை. இந்தக்காரணங்களாலேயே இவ்விரண்டையும் கண்டித்து விருதுநகர் மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

மத விடுமுறை.

மற்றபடி சர்க்காரார்விடுமுறை நாட்களில் "மத சம்பந்தமான

லீவு நாட்கள் நீக்கப்படவேண்டும்" என்று மற்றொரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.

நமது அரசாங்கத்தில் வருஷம் ஒன்றுக்கு ஞாயற்றுக்கிழமைகளில் 52 நாட்கள் கழிந்து விடுகின்றன. இது கிறிஸ்துவ சமயத்தை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட நாளாகும். மற்றபடி குறைந்தது எல்லா மத சம்பந்தமாகவும் வருஷத்தில் 35 நாட்கள் விடுமுறையாகப் பாவிக்கப்படுகின்றன. இவைகள் அரசாங்க இலாகாக்களிலும், பள்ளிக்கூடங்களிலுமே கையாளப்பட்டு பிறகு எல்லாக் காரியாலயங்களுக்கும் பரவி வரப்படுகின்றது.

இதனால் அந்த நாட்களின் தொழில்கள் கெடுவதுடன் கைப்பணமும் செலவழிக்கப்படுவதோடு மத உணர்ச்சியையும் வலுப்படுத்துவதாக ஏற்பட்டு வருகின்றன.

அன்றியும், ஒரு சமூகத்தாரின் விடுமுறைக்காக மற்ற சமூகத்தாரின் வேலை கெடுவதுடன் இதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு மற்ற மதக்காரர்களும் நஷ்டமடைய வேண்டியவர்களாகின்றார்கள் ரம்சானுக்காக இந்துக்களும், கிறிஸ்துவர்களும் ஏன் நஷ்டமடைய வேண்டும்? வைகுண்ட ஏகாதசிக்காக இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் ஏன் நஷ்டமடையவேண்டும்? கிறிஸ்துப் பிறந்த நாள் பண்டிகைக்காக இந்துக்களும், முஸ்லீம்களும் ஏன் நஷ்டமடைய வேண்டும்? மென்பதையும் மற்றும் மத சம்பந்தமான விஷயங்கள் எதிலும் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த விடுமுறை நாட்களுக்காக ஏன் நஷ்டமடைய வேண்டும்? மென்பதையும் கவனித்தால் மதத்தின் பேரால்மக்கள்பலவந்தப்படுத்தப்பட்டு கஷ்ட நஷ்ட மடைவது விளங்கும்.

ஆதலால் ஞாயிற்றுக்கிழமை என்பதையும் அது மத சமபந்தமானது என்பதற்கு ஆகவே மாற்றி பொதுவாகவே ஒருவித விடுமுறைகளை ஏற்படுத்தி அவற்றிற்கும் எல்லோரும் அனுபவிக்க சௌகரியங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது அவசியமாகும்.

சாதாரணமாக பள்ளிக்கூடங்களுக்கு விடப்படும் விடுமுறை நாட்கள் வாரத்தில் சனி, ஞாயிறு என்பதில் 52 வாரத்திற்கு 104 நாட்களும், வெயிற் காலம் 2-மாதம் என்பதில் சனி ஞாயிறு நீங்கி 45 நாட்களும் இவை தவிர ஜனவரியில் 10 நாட்களும் மற்றும் பண்டிகைகளில் 25 நாட்களும் ஆக ஒட்டு மாதம் வருஷத்தில் 6 மாதகாலத்திற்கு மேலாகவே 200 நாட்கள்வரைகூட விடுமுறை நாளாக பயன் படுத்தப்படுகின்றது.

இதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் பொருள் நஷ்டம் கால நஷ்டம் எவ்வளவு என்று பார்த்தால் அதன் கஷ்டம் விளங்கும். இவைகள் எல்லாம் ஒருபுறம் இருந்தாலும், மத சம்பந்தமாக அரசாங்கத்தில் ஏன் லீவு விடவேண்டும் என்பதும், அவசியமாயிருக்கின்றவர்கள் தங்கள் தங்கள் சொந்த லீவாக வாங்கிக்கொள்ள சௌகரியம் அளிக்கப்பட வேண்டும் என்பதும் இதன் மூலம் மத உணர்ச்சியை எவ்வளவு குறைக்கப்படக்கூடுமோ அவ்வளவு குறைக்க வழி தேடவேண்டுமே என்பதுமே இத்தீர்மானத்தின் கருத்தாகும். மற்றபடி ஓய்வோ விடுமுறையோ மக்களுக்கு கூடாதென்ற கருத்தின்மீது இததீர்மானம் செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஈரோடு ரயில்வே ஸ்டேஷன்மாற்றம்.

ஈரோடு ரயில்வே ஸ்டேஷனானது 25-8-31 தேதி முதல் இப்போது இருந்து வந்த ஸ்டேஷனுக்கு சுமார் ஒரு மைல் தூரம் மேற்கு புறமாகத் தள்ளி கட்டப்பட்டு அங்கு மாற்றப்பட்டுவிட்டது. சுமார் ஒருகோடி ரூபாய் வரை செலவு செய்து கட்டடங்கள் பல கட்டப்பட்டிருக்கின்றன. தென்இந்தியாவில் உள்ள பெரிய ஸ்டேஷன்களில் இதுவும் ஒருபெரியதும் அதிக செலவிட்டுக்கட்டப்பட்டதுமாகும். நாளாவட்டத்தில் ஈரோடு தென்இந்திய ரயில்வே பெரிய வண்டிப்பாதைகளுக்கு ஒரு முக்கிய ஸ்தலமாக செய்யப்படக்கூடும். இதன்பயனாக சுமார் ஆயிரம் குடிகள் ஈரோட்டிற்கு அதிகமாகலாம். ஆனால் பிரயாணம் செய்கின்ற ஜனங்களுக்கு சிறிது கஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். என்னவெனில் ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் முன்னையைவிட சற்று அதிக தூரமாகிவிட்டது. ஸ்டேஷனுக்கு இரவுகாலங்களில் முன்போல் தைரியமாய் போக முடியாமல் பயப்படவேண்டியதாய்விட்டது. மோட்டார்கூலி வண்டிவாடகை முதலியவைகள் அதிகமாய்விட்டன. ரயிலுக்கு போவது வருவதில் பிரயாணிகளுக்கு அரைமணி நேரம் அதிகம் செலவு செய்யவேண்டியதாகிவிட்டது. பொது ஜனங்களுக்கு இதுபோல் இன்னும் சில அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தாலும் ரயில்வே ஸ்டேஷன் மாற்றம் விஷயம் சுமார் 20 வருஷங்களாகவே யோசனையில் இருந்துவந்ததாகும். இவ்விதம் அசௌகரியங்கள் பிரயாண வசதிகளில் ஏற்படுவது சகஜமேயாகும்.

ஆனாலும்கூட இந்த ஸ்டேஷன் கட்டிய பணத்தைக்கொண்டு ஒரு புதிய ரயில்பாதை ஏற்பாடு செய்திருந்தால் ஈரோட்டிற்கும் மைசூருக்கும் ஒரு ரயில் பாதை போட்டிருக்கலாம். என்ன காரணத்தினாலோ அவர்களுக்கு புதியரயில்பாதையைவிட ஈரோடு ஸ்டேஷன் பெரியதாகக்கட்ட வேண்டியது அவசியமாகிவிட்டது. என்றாலும் இந்த ஸ்டேஷனால் ஈரோடு பட்டணத்திற்கு சற்று முற்போக்கேற்பட்டதென்றே சொல்லலாம்.

மூஸ்லீம்கள் பிரச்சினை.
தனித்தொகுதிக்கு ஜனாப் ஜின்னால் மகமது ஆதரவு.

சென்னையில் பிரபல வியாபாரியும், இந்திய தோல் அரசரும் (India Leather King)முஸ்லீம் சமூக பிரமுகருமான திரு. ஜமால்மகமது சாயபு அவர்கள் தலைச்சேரி மாப்பிள்ளை முஸ்லீம்கள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசியதில் "ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட கூட்டுத் தொகுதி நல்லதானாலும் பலகாரணங்களால் சென்னை முஸ்லீம்கள் செய்துள்ள தனித்தொகுதித் திட்டத்தைத் தான் ஆதரிப்பதாகவும் எல்லா முஸ்லீம்களும் ஆதரிக்கவேண்டு"மென்றும் சொல்லி இருக்கிறார்,

ஆகவே, தனித்தொகுதிகளுக்கு எந்த முஸ்லீம் பிரமுகர் விரோதமாக இருக்கின்றார் என்பதை விளக்க வேண்டியது தேசிய முஸ்லீம்கள் என்பவர்களின் கடமையாகவும் தேசிய இந்துக்கள் என்பவர்களின் கடமையுமாகும்.

சமதர்ம தீர்மானங்கள்.

ஐக்கியமாகாணத்தைச்சேர்ந்த லக்னோ என்னும் லக்ஷ்மணபுரியில் தொழிலாளர் மகாநாடு கூடி அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் முக்கியமானவை:-

1. திரு.எம்.என். ராயை அரசாங்கத்தார் கைதி செய்திருப்பதானது இந்திய தொழிலாளர் இயக்கத்தை நசுக்க அரசாங்கத்தார் உத்தேசங் கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகின்றது.

2 வட்டமேஜைமகாநாட்டை தொழிலாளர் மகாநாடு மறுப்பதுடன் கீழ்கண்ட திட்டங்களே தொழிலாளர் அடிப்படையான லட்சியமாயிருக்க வேண்டும்.என்னவும் தீர்மானிக்கிறது.

3. அரசாங்கநிர்வாகம் நேரே பொது ஜனங்கள் கைக்குவர வேண்டும்.

4. இந்துதேச சமஸ்தானங்களையும் ஜமீன்தார்களையும் ஒழித்துவிடவேண்டும். குடியானவர்கள் கொடுமைப்படுத்தப்படுவதிலிருந்தும் அவர்களது செல்வங்கள்பறிக்கப்படுவதிலிருந்தும், தப்பித்துக்கொள்ள சுதந்திரமளிக்கவேண்டும். பூமிகள், சுரங்கங்கள், பாங்கிகள் ரயில் முதலியவைகளும் பொது மக்கள் உபயோகஸ்தாபனங்கள் ஆகியவைகளையெல்லாம் அரசாங்கசொத்துக்களாக ஆக்கிவிடவேண்டும்.

5. என்றைக்கும் குறைக்கமுடியாததான ஒருவாழ்க்கை திட்டம் இன்னது என்பதை தொழிலாளிகளுக்கு வகுத்து விடவேண்டும். எந்தக்காரணத்தைக்கொண்டும் அவர்களது வருமானம் அதற்குக் குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். தேசத்தின் பொருளாதார நிலைமையின் ஆதிக்கமானது சரீரத்தால் வேலை செய்யும் தொழிலாளர்களிடத்திலும் உழுதுபயிர் செய்யும்குடியானவர்களிடத்திலுமே இருக்கவேண்டும் என்பதாக தீர்மானங்கள் ஏகமனதாய்நிறைவேற்றப்பட்டன.

"கடவுள் பெருமை" சைனுவின் மீது கடவுளுக்குக் கோபம்.

சைனுதேசம் இந்தியாவைவிடப் பெரிய தேசமாகும். 40கோடிஜனத்தொகைகொண்டது.

இன்று "வருணபகவானின் தயாள குணத்தினால்" (மழையின்கொடுமையால்) 30000 சதுரமைல் தண்ணீரில் முழுகி இருப்பதாகவும் 2000000 இருபது லட்சம் ஜனங்கள் வீடுவாசலற்று, அன்ன ஆகாரமற்று, தவித்து நின்று, சொத்துப் பொத்தென்றுசெத்து வருகின்றார்களென்றும் ஆடு, மாடு, நாய் கோழி, பூனை முதலிய ஜந்துக்கள் கோடிக்கணக்காகச் சாகின்றனவென்றும் சேதிகள் வருகின்றன.

இதற்குக்காரணம்? கடவுளா? வருணபகவானா? இயற்கையா?

விருதுநகர் சுகாதார வாரக்கொண்டாட்டம்.

சுகாதார வாரக்கொண்டாட்டம் விருதுநகரில் 24-8-31 முதல்30-8-31வரை நடைபெறும். சுகாதாரக் கண் காட்சிசாலையை விருதுநகர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி டாக்டர் கேப்டன் சி. கிருஷ்ணசாமி பிள்ளை எல். எம். எஸ் முனிசிபல் ஆபீசில் 24ந்தேதி மாலை 5மணிக்குத் திறந்து வைப்பார்.

24ந்தேதி டாக்டர் சி. கிருஷ்ணசாமி பிள்ளையவர்களின் தலைமையில் திரு வி. வி. இராமசாமி அவர்களால் வாவேற்பு உபன்யாசமும், 25ந்தேதி திரு. வி. வி. ஷண்முகநாடார் அவர்களின்தலைமையில்'சிசுமரணம்'என்பதுபற்றி ஓர் உபன்யாசம் டாக்டர் அம்புரோஸ் ஜேகப் அவர்களாலும் 29ந்தேதி திருமதி எரிக்ஷன் அம்மையார் அவர்களின் தலைமையில் டாக்டர் மிஸ் எல். ஞானமுத்து எல். எம். பி. அவர்களால் 'குழந்தைகளைப் பராமரிக்கும் முறை'' என்பது பற்றியும், திருமதி, பத்மாவதி திருவண்ணாமலை அவர்களால் "நகர சுகாதாரமும் பெண்கள் கடமையும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றப்பட்டு, 30ந்-தேதி மாலை சிவகாசி சப்கலக்டர் திரு. பி எம். இராமசாமி ஐயர் M. A., I. C., S. அவர்களால் பரிசும் வழங்கப்படுமென முனிசிபல் கௌன்சிலரும் ஜில்லா போர்டு மெம்பரும், ஷை வைபவத்துக்குத் தலைவருமான திரு. M. S. P. செந்தில் குமார் அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் 23-8-31ல் சங்கத்தின் கட்டிடத்தில்மாலை 7மணிக்குதோழர் எஸ். கந்தசாமி அவர்கள் தலைமையில்நடந்தது. அவ்வமயம்30-8-31ல்திருவாரூரில் நடைபெறும் மாகாணச் சுயமரியாதைத் தொண்டர் இரண்டாவது மகாநாட்டிற்கு நம்சங்கத்தின் தலைவர் உயர்திரு. A. R. சிவானந்தம் அவர்களை நம் சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்று கீழ் கண்ட தீர்மானத்தை ஷை மகாநாட்டில் கொண்டு வாவேணுமாய் தலைவரவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

தீர்மானம்.

மூடப்பழகக வழக்கங்களை அறவே ஒழித்து இளைஞர்களை நல் வழிப்படுத்தக் கூடிய முறையில் பாடசாலைகளில் பாடப்புத்தகங்களை அமைக்கும்படி கல்வித் இலாகா அதிகாரிகளை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. ஷை தீர்மானமானது தோழர் S. கந்தசாமி அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திருவாளர்கள், B. ரங்கசாமி H. S. முனுசாமி ஆகியோர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையோர்களால் ஏகமனதாக நிறைவேறி தலைவர் முடிவுரை கூறிய பின் வந்தேமாதரத்துடன் 8-30-மணிக்குக் கூட்டம் கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

ஓர் அநுதாபக் கூட்டம்.

ஆகஸ்ட் மாதம் 17தேதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நத்தம் முஸ்லீம் நேயர் சங்கத்தின் ஸ்பெஷல் பொதுக்கூட்டம் ஜனப் வி. மீ. முகம்மதுகனி அவர்கள் தலைமையில் கூடியது.

நம் நேயர் சங்கத்துக்கு பல விதத்தும் பொருளுதவி செய்த உத்தம சிரேஷ்டரும், தர்மிஷ்டருமான ஜனப் கொ. நாகூர்மீரா சாயபு அவர்களும், அன்னாரின் அருமை பத்தினியாரும், ஜனப் எ. கே. பக்கீர்முகம்மது அவர்களும் நேக வியோகமடைந்ததைப்பற்றி இச்சங்கத்தின் ஆழ்ந்த அநுதாபத்தை அவர்கள் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொண்டதுடன், கத்தம் முதலியவை ஓதி சிற்றுண்டி வழங்கப்பட்டு கூட்டம் 6 மணிக்கு இனிது கலைந்தது.

ஓர் அநுதாபம்.

கும்பகோணம் தாலூகா திருவிசநல்லூர் திரு. பிச்சைக்கோ ரைவர்கள் இறந்தமை தெரிந்து மிக வருந்துவதாகவும் அன்னவர்களின் புதல்வர்களுக்கு தமது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் கூத்தூர் சி. முத்துகிருஷ்ணன் எழுதுகிறார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பும் நாங்கள் எதிர்காலத்தில் பல இன்னல்களை மேற்கொள்ளவேண்டும். போர்புரியவும் கோரிடும். நாம் எப்பொழுதும், எதற்கும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். தின்னைத்தானங்களாயிருக்க விரும்பாத நாம் அவர்களது கூச்சலைப்பொருட்படுத்தலானேன்? "மோட்ச சாம்பிராச்சியம்" "சுவர்க்கபோகம்!' என்ற வெற்றரைகளால் மக்களை இத்துணை காலமாய் மயக்கிக் கோழைகளாக்கிய சமயச் சோம்பர் இதுகாலை தாவர உணவுப் பித்தராய் மக்களை இடர்க்குள்ளகப் படுத்தவும், நாட்டைப் பாழ் படுத்தவும் முற்பட்டிருக்கின்றனர். சுயமரியாதைக்காரர் அதற்கு இடங்கொடுக்கலாகாதென்று விரும்புகிறேன். நாம் புலால் உணவுப் பிரசாரஞ்செய்யத்தேவையில்லை. ஆயின், தாவர உணவுப்பிரசாரத்திற்கு எதிர் பிரசாரம் செய்தலவசியம். நம்மனோருக்கு புலால் உணவின் அவசியத்தைப் பற்றி சுயமரியாதைக்காரர் தமது சொற்பொழிவுகளில் வற்புறுத்திப் பேசுதல்வேண்டும்.

"மறு உலகத்தில்" என்னவோ கிடைக்குமென்று தாவர வுணவினர் கூறுவது சிறு பிள்ளைத்தனமானதல்லவா? அங்ஙனம் எதாயினும் கிடைப்பதை வலிமையற்ற "சைவர்"கள் எவ்வாறு வலிமையுடைய "புலையர்" களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளுவர்? புலால் உணவினரை அவர்களது 'சிவகாருணியமற்ற' உணவுக்காக 'ரகசத்தில் போட்டால் அவர்களனைவரும் ஒருங்கு சேர்ந்து எழுந்து 'மோட்சத்தைக் கைப்பற்றி விட்டால் பிறகு தாவர உணவினரும் அவர்களது 'சைவக்கடவுளும்' எங்கு போவர்! பெருந்தாகையினாலன்றில்துவரும் இவ்வாமையரும் புலால் உணவினர். அவர்களுக்கும் 'மோட்சங்கள்! உண்டு. அங்கு நாங்கள் போய்விடலாமே! 'சைவமோட்சத்திற்றான்' இடமில்லையெனினும் 'புலால் உணவினரது 'சுவர்க்கத்திற்காதல் போகியலும். எனவே அஞ்சேல்! அஞ்சேல்!! அஞ்சேல்!!!

புலால் உணவில் மிகப்பிரியமுடையமுல்லீம் மன்னர்களுஞ் தண்ணவியும், சிவகாருண்யமுமுடையோர் பலரிருந்திருக்கின்றனர். உண்மையில் தாவர உணவினரே மிக்கக்குரூரமாய் நடந்து கொள்கின்றனர். எவ்வாறு வாதாடினும் தாவரவுணவு மாத்திரமே தண்ணவியுடையதாதென்று நிட்டமாய்க்கூறிட முடியாது. எனவே 'இன்றே சைவராகுங்கள்! இன்றேல் என்ன'? என்ற கேள்வியைச் சுயமரியாதைக்காரர் கேட்டுக் கொண்டே கொழுத்த புலால் உணவையுண்டு கொழுப்பேறி செழிப்படைந்து செயல்புரிய முன் பட விரும்புகின்றேன்.

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் குளிர்தரு எது?

எஸ். தருமாம்பாள் தயாரிக்கும்

சித்தர் மகா சந்தனதித் தைலம்

கொடிய வெய்யிலாலும், அதிக வேலையாலும், இன்பநுகர்ச்சியாலும், மூளைகொதிப்புற்று அழல்கண்டதிரேகங்கட்கு இரண்டு, மூன்று ஸ்நானங்களில் உடனே குணமில்லாவிடில்பணம் வாபீஸ். வழுக்கைத்தலையிலும் கூந்தல் வளரும், கை கண்டது.

ஈ. வெ. இராமசாமிப்பெரியார் கூறுவதாவது:—

"சித்தர் மகா சந்தனகித்தைலம் என்பது மிகவும் வாசனை பொருந்தியதாகவும், ஸ்நானம் செய்து கொண்டால் மிக்க குளிர்ச்சியைத் தரக்கூடியதாகவும், கூந்தல் வளரவும், கூந்தல் உதிர் வதைத் தடுக்கவும், தலைவலி, கண்ணோய் முதலிய சூட்டினால் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும், மிகவும் உபயோகப்படக் கூடியதாயிருக்கின்றது. தலைவாரிக் கொள்ளவும், ஸ்நானம் செய்யவும் இரண்டிற்கும் உதவும்படியான சிறந்ததைலம் இதுவே."

6 அவுன்சு 1—0—0, 12 அவுன்சு 1—14—0,
24 அவுன்சு 3—12—0

சித்தானந்த வைத்தியசாலை,
35, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

யம். அதாவது: ஹிந்திபாஷையைப்படித்தால் அது இந்தியாவில் மட்டும் தான் செல்லுபடியாகும். அதாவது ஹிந்தி பாஷையைப் படித்தவன் இந்தியாவில் மட்டுந்தான் சுற்றுப் பிரயாணம் செய்ய முடியும். இங்கிலீஷ் பாஷையோ உலக முழுவதும் செல்லுபடியாகும். இங்கிலீஷ் வழங்காத இடம் உலகத்திலேயேயில்லை. ஆகையால் இங்கிலீஷ் கற்றுக்கொண்டவன் உலக முழுவதும் பிரயாணம் செய்ய அனுகூலமாயிருக்கிறது. இந்த முறையில் பார்த்தாலுங்கூட ஹிந்திபாஷையைப் படிப்பதைவிட இங்கிலீஷ் பாஷை படிப்பது தான் லாபகரமானதும் உபயோகமுள்ளதும் ஆகும் என்பது விளங்குகிறது

5. ஹிந்தி பாஷையைப்படித்தால் இந்தியருக்கு இயற்கையாயுள்ள குறுகிய எண்ணங்களும் மூடபழக்க வழக்கங்களும் ஜாதி மத வித்தியாசங்களும் ஒரு போதும் ஒழியவே ஒழியாது. அதற்கு மாறாக அத்தீய குணங்கள் ஆழமாக வேரூன்றிவிடும். ஹிந்திபாஷை மட்டும் அல்ல, இந்தியாவில் வழங்கும் இந்திய பாஷைகளுக்கு எல்லாம் இத்தகையதுணங்களுண்டு ஆனால் இந்தியர்கள் இங்கிலீஷ் பாஷையைக்கற்றுக்கொண்டால் பரந்த நோக்கமும் விசாலமான அறிவும் பகுத்தறிவும் சக்தியும் அடைய முடியும். ஹிந்திபாஷையில் சயன்ஸ் என்னும் சாஸ்திரங்கள் கிடையாது. எப்படி தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி முதலிய பாஷைகளில் பாரதம், ராமாயணம் புராணங்களும் குப்பைக்கூளங்களும் நிறைந்திருக்கின்றனவோ அவ்விதமாகத்தான் ஹிந்தி பாஷையிலும் பாரதம் இராமாயணம் புராணம் குப்பைகூளங்களேநிறைந்திருக்கின்றன, ஆகவேஹிந்திபாஷையைப் படித்துக்கொண்டால் பாரத இராமாயண புராணக்கதைகளைத்தான் படிக்க முடியுமேயல்லாமல் சயன்ஸ் என்னும் சாஸ்திரங்களைப் படிக்க முடியாது. ஆகையால் ஹிந்தி படிப்பதைவிட ஆங்கிலம் படிப்பது தான் பன்மடங்கு சிறந்தது.

6. மேல் நாட்டு சயன்ஸ் என்னும் சாஸ்திரங்களை ஹிந்தி பாஷையில் மொழிபெயர்த்துக் கொள்ளலாம் என்று சிலர் சமாதானம் சொல்லுவார்கள். மேல் நாட்டு சாஸ்திரங்களை ஹிந்தியில் மொழிபெயர்த்துக்கொண்டு ஹிந்திபாஷையில் படிப்பதைவிட ஆங்கில பாஷையிலேயே படித்துக்கொள்வது மிகவும் சுலபமாகும். சாமிக்கும் மனிதனுக்கும் இடையில் பூசாரிகள் தரகர்களாயிருப்பது போல மேல்நாட்டு சாஸ்திரங்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையில் ஹிந்திபாஷை ஏன் இருக்கவேண்டும்? ஆகவே ஹிந்திபாஷை என்பது அனாவசியமானதும் அவசியமில்லாததும் அர்த்தமற்றதுமாகும்.

7. இந்திய சுயராஜ்யத்தில் ஹிந்தி பாஷை, அரசாங்கபாஷையாயிருந்தாலுங்கூட (அப்படி இருக்கமுடியாது. இருக்கவும் போவதில்லை) ஆங்கிலேயரின் தொடர்பு நம்மை விட்டுப் போய் விடாது. இந்திய சுயராஜ்யத்தில் இப்போதைப் போலவே ஆங்கிலேயர் இந்தியாவில் இருந்தே தீர்வார்கள். இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் எப்பொழுதும் தொடர்பு இருந்துகொண்டேயிருக்கும். இந்திய சுயராஜ்யத்தில் ஆங்கிலேயர் மூட்டைமுடிச்சுகளுடன் இங்கிலாந்துக்குப் போய்விடுவார்கள் என்பது வெறுங்கனவு. ஆகையால் இந்தியருக்கு இப்பொழுதைப்போலவே அப்பொழுதும் இங்கிலீஷ் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகிறது. அப்பொழுது காங்கிரஸ் கருத்துப்படி மூன்று பாஷை கற்கவேண்டியிருக்கிறது. அதாவது, தாய்பாஷை ஒன்று, அரசாங்க பாஷை என்று சொல்லப்படுகிற ஹிந்தி பாஷை ஒன்று, இங்கிலீஷ்பாஷை ஒன்று ஆக மூன்று பாஷை படிக்கவேண்டியிருக்கும். இப்பொழுது தாய்பாஷை, இங்கிலீஷ்பாஷை இரண்டையும் படிப்பதற்கே மாணவர்களுடைய வாழ்நாளில் பல வருஷங்கள் செலவாகிறதோடு மூளையை உழைப்பதன் மூலம் தேக பலத்தையும் இழந்துவிடுகிறார்கள். இதற்கே இப்படியிருக்க மூன்று பாஷைகளைப்படிக்க நேரிட்டால் என்ன ஆகும் என்பதை யோசித்துப்பாருங்கள். ஆகையால், இவ்விதகஷ்டங்கள் நேராதபடி இங்கிலீஷ் பாஷையையே இந்தியாவின்பொதுப்பாஷையாகவைத்துவிடுவது பலவிதத்திலும் நன்மை பயக்கும்.

8. "இங்கிலீஷ் அன்னியதேசத்துப்பாஷை. ஆகையால் அது இந்தியாவின் பொதுப்பாஷையாயிருக்கக்கூடாது" என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஆக்ஷேபனையும், ஆலோசனையற்றதாகும். இங்கிலீஷ்பாஷை அன்னிய பாஷையாயிருந்தாலும் உலகத்தில் பல தேசங்கள் அப்பாஷையைப் பேசிவருகின்றன. கானடாதேசம், யுனைட்டெட்ஸ்டேட்ஸ், இங்கிலாந்து, ஆஸ்ட்ரேலியா கண்டம் இன்னும் சிற்சில இடங்களிலும் இங்கிலீஷ் பேசப்படுகிறது. இது அல்லாமல் உலகத்தின் வடகோடிமுதல் தென்கோடிவரையிலும், மேல்கோடி முதல் கீழ்கோடிவரையிலும் இங்கிலீஷ்பாஷை தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அன்றியும் ருஷ்யா தேசம் இப்போது தனது தாய் எழுத்தை உதறிவிட்டு இங்கிலீஷ் எழுத்துக்கள் இருபத்தாறையும் அப்படியே கடன் வாங்கிக்கொண்டிருக்கிறது. சைனாவிலும், ஜப்பானிலும் இங்கிலீஷ் எழுத்துக்களையே உபயோகிக்கவேண்டும் என்று சில அறிவாளிகள் முயற்சிசெய்து வருவதோடு அந்தக் கட்சி பலமடைந்தும்வருகிறது. இவ்விதம் உலகமே மாறுதலடைந்து இங்கிலீஷ்மயமாகவும், இங்கிலீஷ் சார்பாகவும் இருக்க, இந்தியாவின் பொதுப்பாஷையாக இங்கிலீஷ் பாஷையை அமைக்காமல் பலவித பிரதிகூலங்களையுடையதும் ஒன்றுக்கும் உதவாததுமான ஹிந்திபாஷையை இந்தியாவின் பொதுப்பாஷையாகச் செய்வது இந்தியாவின் அபிவுக்கு அஸ்திவாரம் போட்டதாகும். இதனால், இந்தியாவின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்கும் இங்கிலீஷ் பொதுப்பாஷையாயிருக்கவேண்டுமா? அல்லது ஹிந்திபொதுப்பாஷையாயிருக்கவேண்டுமா? என்பதை வாசகர்களே யோசிக்கவேண்டும்.

9. இந்த விஷயத்திலும் சிலர் குதர்க்கம் பேசுகிறார்கள். அதாவது, மேல்நாட்டுபாஷைகளாகிய பிரெஞ்சு, ஜெர்மனி, இத்தலி முதலிய பாஷைகளிலும் சயன்ஸ் என்னும் நவீன சாஸ்திரங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க அப்பாஷைகளில் ஒன்றை இந்தியாவின் பொதுப்பாஷையாகவைக்கலாமே இங்கிலீஷ்பாஷைதான் பொதுபாஷையாக ஏன் வைக்கவேண்டும்? என்று குதர்க்கம் பேசுகிறார்கள். இதற்கும் காரணம் சொல்லவேண்டியது அவசியம் தான். மேல் நாட்டுபாஷைகள் எல்லாம் சயன்ஸ் என்னும் நவீன சாஸ்திரங்களையுடையதுதான். ஆனால், இங்கிலீஷுகாரர்கள், மற்ற மேல்நாட்டாரைவிட அதிகமாக இங்கிலீஷ் பாஷையை அபிவிருத்திசெய்திருக்கிறார்கள். அன்றியும் மேற்காட்டியபடி உலகத்தில் இங்கிலீஷ் பாஷை செல்வாக்கடைந்திருப்பதுபோல் வேறுபாஷைகள் செல்வாக்கடையவில்லை. இன்னும் இங்கிலீஷ்காரரின் தொடர்பு நமக்கு சுமார் 150 வருஷமாக இருந்து வருகிறது. மேல் நாட்டு பாஷைகளைப் படித்த இந்தியர்களில் இங்கிலீஷ் பாஷைப் படித்தவர்கள்தான் அதிகமாயிருக்கிறார்கள். இக்காரணங்களாலும் இன்னும் சிலகாரணங்களைக்கொண்டும் இந்தியாவின் பொதுப்பாஷை இங்கிலீஷ் பாஷையாக இருந்தால் இந்தியா நன்மைபெறக்கூடும். ஹிந்திபாஷைதேசபாஷையாக இருந்தால் அதனால் தொல்லைகளும் அசௌகரியங்களும் தீமைகளும் உண்டாகும் என்பது உறுதி.

10. ஹிந்தி அரசியல் பாஷையாயிருந்தால் அரசியல் விஷயங்கள் சரிவாகடைபெற முடியாது. எனென்றால், ஹிந்தியில் டைப்ரைட்டர் மிஷின், சுருக்கெழுத்து முறை முதலியன கிடையாது. அவைகளெல்லாம் இனிமேல் தான் புதிதாக உண்டாக்கவேண்டும். அதற்கும் வெள்ளைக்காரன் தயவுவேண்டியிருக்கிறது. இன்னும், அரசியல் விவாதத்துக்கு வேண்டிய வார்த்தைகள் கிடையாது. அந்த வார்த்தைகளையும் இனிமேல்தான் கண்டுபிடிக்கவேண்டும். இங்கிலீஷிலோ டைப்ரைட்டர் மிஷின்களும், ஷார்ட்ஹேண்ட் (சுருக்கெழுத்து) எழுத்தும், அரசியல் விவாரங்களை நன்குவிளக்கு வதற்குத் தகுந்த வார்த்தைகளும் அமைந்திருக்கின்றன. இத்தகைய காரணங்களாலும் மேலே காட்டியகாரணங்களைக்கொண்டும் ஹிந்திபாஷை இந்தியாவின் பொதுப்பாஷையாயிருக்க வேண்டுமா? அல்லது இங்கிலீஷ் பொதுபாஷையாயிருக்க வேண்டுமா? என்பதைத் தாங்களாகவே யோசித்துமுடிவுசொல்லும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஹிந்திபாஷை என்பது காங்கிரஸ் செய்யும் அனேக புரட்டுகளில் ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீர்திருத்தத் திருமணம்.

தென்மாப்பட்டு "வைக்கம் வீரர்" வாசகசாலையின் ஆதரவில் 30—8—31 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திரு சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், திருமதி சிவசாமி அம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

விட்ட பத்த விஜயத்தின் புரட்டு ஒரு பக்கமிருக்கட்டும். சாஸ்திரத்தின் பெயரால் ஏமாறுகிறவர்களுக்கு இக்காலத்தற்காலிகமாக நன்மையளிக்கும்.

'பத்த விஜயத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, விதவையான பெண் மொட்டையடித்து முக்காடு போடவேண்டிய அவசியமில்லை என்பதற்கு வெங்கம்மாள் அதிலும் பெருமாள் சம்சாரமே அவதாரம் செய்தவள் சாட்டிய வழியையாவது திருப்பதிக்குப் போய் மொட்டையடித்துக்கொள்கிறவர்களும், விதவையான பெண்களே முடிஎடுக்க வேண்டுமென்று சொல்கிறவர்களும் கூர்ந்து கவனிக்கத்தக்கது. பெருமாள் சம்சாரமே மொட்டையடிக்கும் அர்த்தமற்ற வேலையை அவதாரம் செய்து கூடாது என்றுவிளக்கியிருக்கும்போது சுயமரியாதை இயக்கத்தை நாத்திக இயக்கமென்று பறை அடித்துவிட்டு மொட்டையடிக்கும் வேலையில் முனைந்து நின்றால் ஏதாவது பலன் இருக்கிறதா? என்பதை யோசித்துப்பாருங்கள். மொட்டையடிக்கும்படி சொல்லியதற்கு அந்தக்காலத்துமகந்துவின் சிம்மாசனம் எறிக்கப்பட்டுவிட்டது. மொட்டையடிப்பதின் மூலமாக பாமரர்களிடத்தில் பணம் பறித்துக்கொண்டுவரும் திருப்பதியிலிருக்கும் மகந்துவுக்கு பைத்தியம் பிடித்து விட்டது. அப்பைத்தியத்தை தீர்ப்பதற்கு மில்டர் வெங்கிடாசலபதி பெருமாளால் முடியவில்லை. நாம் வேண்டிக்கொள்வதற்கு நமது ரோமத்தையும், ரொக்கத்தையும் கொடுப்பதைத் தவிர வேறுகண்ட பலன் என்ன? என்பதைப் பொதுவாக வைதீகர்கள் கவனிக்கவேண்டும். கைம்பெண் ஆகும் பார்ப்பனப்பெண்களும் மொட்டையடிக்கும் வைதீகர்களின்வேலைத்திட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு வெங்கம்மாள் சரித்திரமே கவனிப்பது மிக்க நலம். கடவுள், மதம், சாஸ்திரம் போன்ற பயத்தால் மொட்டையடிக்கும் நமது நாட்டிலுள்ள வர்கள் திருப்பதி மகாபத்த விஜயத்தில் சொல்லியிருக்கும் வெங்கம்மாள் சரித்திரத்தைக் கொண்டாவது மொட்டையடிக்கும் பயத்தை விட்டொழிக்கக்கேட்டுக்கொள்கிறேன்.

பார்ப்பனீய அட்டகாசம்.

பாபநாசம் தாலூகா, கபிஸ்தலம் போஸ்ட், தெண்சருக்கை கிராமத்திலிருக்கும் திரு. கெ. பக்கிரிசாமி ஆச்சாரி என்பவர் கீழே விவரித்தபடி ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்;—

நான் சிலகாள் ஜலப்பிரதேசம், சென்று வருவது வழக்கம். அதனால் கல்லடிசும், குடையும், பூட்டும் சதாபோட்டுக் கொள்வது வழக்கமாயிருந்து வருகிறேன். ஷிபூரிலுள்ள பிராமண வம்சத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து "டிரஸ் செய்து கொள்ளக் கூடாது, குடைபிடிக்கக்கூடாது, பூட்ஸ்போடக்கூடாது, மீறி போட்டுக்கொண்டு தெருவழி வந்தால் பறையனிடம் சொல்லி அடிக்கச்சொல்வேன்" என்று சொன்னதின் பேரில் உடனே கும்பகோணம் சப்டிவிஷனல் மேஜிஸ்ட்ரேட் அவர்களுக்குமனு செய்திருக்கிறேன்.'

புதுப்பாளையம்

வட ஆற்காடு ஜில்லா பஞ்சாயத்துக்கோர்ட்டு தலைவர் தேர்தல்.

இவ்வூர் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவர் தேர்தல் 8-8-31ல் கிராமச் சாவடியில் டெவின்யூ இன்ஸ்டெக்டர் அவாகளால் நடத்தப்பட்டது. அவ்வமயம் ஆறு அங்கத்தினர்கள் ஹாஜராயிருந்தனர். திரு. பி. ஆர். குப்புசாமி அவர்களை அச்சபைத் தலைவராய் நியமித்து மே திரு. பி. ஆர். குப்புசாமி அவர்களையே எல்லா மெம்பர்களாலும் ஏகமனதாகப் பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப் பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணை 10. (பத்து)

கிடைக்குமிடம்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

சுயமரியாதைச்

சமத்துவப் பாடல்கள்.

சுயமரியாதைக் கொள்கைகளை நன்கு விளக்கி அவைகளின் முன்னேற்றத்திலேயே சுயராஜ்யத்தையுமடைய முடியும் என்ற விவரத்தைப்பல பாடல்களாலும் வசனங்களாலும் விளக்குவதிது. விலை அணை 0—2—6 ஒரு பிரதி வேண்டுவோர் 3 அணை ஸ்டாம்பு அனுப்பவும்.

குடிகாரர் மகாநாடு.

ஹாஸ்யமுறையில் மதுவிலக்கின் அவஸ்யத்தை வற்புறுத்துவதிது. விலை அணை 1½ ஒரு பிரதி வேண்டுவோர் 2 அணை ஸ்டாம்பு அனுப்பவும்.

ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி.

சமத்துவப் பிரசுர நிலையம், தேற்குமாசிவீதி, மதுரை.

அதிர்ஷ்டம்! ஆனந்தமான நல்ல அதிர்ஷ்டம்!

ஐரிஸ் பிரீஸ்டேட் ஆஸ்பத்திரி

மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப்.

குதிரைப் பந்தய லாட்டரி.



1930 வருஷத்திய ஆஸ்பத்திரி தர்ம ஆக்டின்படி இந்த ஆஸ்பத்திரி கமிட்டியின் உபதலைவரான வைக்கவுண்ட் பவர்ஸ்கோர்ட் சர் வில்லியம் டைய்லர் அவர்களின் மேர்பார்வையிலும், போலீஸ் கமிஷனர் மேர்பார்வையிலும், 1931-வது வருஷம் நவம்பர் மாதம் 18-தேதியில் டப்லின் என்னும் நகரத்தில் சீட்டுகளைக் குலுக்கி எடுக்கப்படும். 1931-வது வருஷம் நவம்பர் 28-ந் தேதியில் மான்செஸ்டர் என்னுமிடத்தில் பிரைஸ் விழுந்த குதிரைகளை ஓட்டத்தில் விடப்படும்

வசூலான பணத்திலிருந்து செலவுபோக ஆஸ்பத்திரிக்காக கால் பாகம் எடுத்துக்கொண்டுமீதி முக்கால் பாக பணத்தையும்பிரைஸ்களாக பிரித்துத்தரப்படும். அதிகத் தொகை வசூலானால் பிரைஸ் தொகையும் அதிகரிக்கப்படும்.

ஒவ்வொரு (100,000) லக்ஷம் பவுன்களுக்கும் கீழ்கண்ட விகிதம்போல் பிரித்துத்தரப்படும்.

1-வது குதிரைக்கு	30,000 பவுன்கள்	3-வது குதிரைக்கு	10,000 பவுன்கள்		100,000.
2-வது குதிரைக்கு	15,000 பவுன்கள்	மற்ற குதிரைகளுக்கு	35,000 பவுன்கள்		பவுன்கள்.

100-பவுன்கள் வீதம 100 ரொக்க பிரைஸ்களுக்கு...10,000 பவுன்கள்

ஒவ்வொரு சந்தாதாரருக்கும் தலைமை ஆபீஸ்ரசீது அனுப்பித்தரப்படும். பிரைஸ்கள் விழுந்த விபரங்களை எல்லா முக்கிய இங்கிலீஷ் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். சென்ற டெர்பி பந்தயத்தில் குறிப்பிட்ட தொகைக்கு நான்கு மடங்கிற்கு மேல் சேர்ந்து விட்டது. டிக்கட் 1க்கு விலை ரூ. 7—8—0. 8—10—31க்குள் டிக்கட் பெற்றுக்கொள்ளவேண்டும்.

குறிப்பு:— மியூட் சுவல் கிளப் ரிசர் விட்ச் குதிரைப்பந்தய லாட்டரி டிக்கட்டு 1க்கு ரூ. 4—8—0 வீதம் கிடைக்கும்.

டிக்கட் கிடைக்குமிடம்:— S. K. வரதராஜலு, ஏஜண்ட் திருச்சங்கோடு S. I.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு காளும், நிமிடமும் வருத்தியும், அடித்தும் வருவதிலேதான் ஒரு மிருகத்தனமான சந்தோஷமும் திருப்தியும் அடைந்து வருகிறான். அவளை ஒரு பெருந்தூணிற்கட்டிவைத்து அவள் காணவும், கேட்கவும், அவள் மனம் வெந்து புழுங்கவும் அவளது கண்கள் முன்னரே செய்யத்தகாதனவும், அருவறுப்பூட்டுவனவும் ஆகும் செயல்களைச்செய்து வருகின்றான். ஆக என் தங்கை இக்கொடும்பாதகனிடம் படும்பாடு சொல்லத்தரமானதன்று. இத்தன்மையாதகத்தம் கணவரிடம் தப்பியோட வழியின்றி தன் பத்திற்குப் பெண்களையாளாக்கும் இவ்விந்துமதம் இருந்தென்ன? போயென்ன? இக்கற்றுத்தவிக்கும் என் தங்கைக்கு உய்வழியொன்றரைப்பீர்களாக.'

இந்தக்கொடுமையான செய்தி கல் மனதைப்பிளந்து கசியவைக்கும்மாத்றது. ஆனால் இதற்குத் திரு காந்தியடிகள் தன் வழக்கம்போலப்பின் வருமாறு பதிலுரைத்தார் 'அறிவிலிகள் தாம் இந்துமதம் இவ்விதக் குறைகளுக்கும், கொடுமைகளுக்கும் காரணம் எனக்கூற முன் வருவார்கள். உலகத்திலுள்ள எல்லாமதங்களும் இத்தகைய நிலைமைக்கு இந்து மதத்தைப்போலவே இடங் கொடுக்கின்றன வென்பதையிவர்கள் உணர்வதில்லைபோலும். இவ்வாறு தன்புறம் மனைவியர் நம் சமூகத்தில் பத்தாயிரம்பேருக்கு ஒருவராக இருப்பதும் அரிது. ஒவ்வொரு மனைவியரும் அவரது இல்லத்திற்கு ஒரு அரசிபோல் விளங்குகின்றார். ஆகவேஇத்தகைய நிலைமைகளைத்தடுக்க வேண்டுமானால் சமூகக்கட்டுப்பாட்டாலும், உலக அபிப்பிராயத்தின் மூலமுமேதான் முயற்சிக்கவேண்டும். சட்ட மூலம் இதில் தலையிடுவது தவறு. இந்தப்பெண்ணைப்பொறுத்த மட்டில் நான் அவளை உலகத்தைத் துறந்து தனிபாக வாழ்ந்து சமூகத்தொண்டும், தேசத்தொண்டும் ஆற்றுமாறு கேட்டுக்கொள்ளுவேன்.'

பரிக்குணவு என்ற எந்தியகையில் பாரா்ங்கல்லை வழங்கியதுபோல், உய்வழி உரைப்பீர் என்று கேட்டவனுக்குக் காந்தியளித்த மெய்வழியின் தன்மையன்னே! ஆனால் காந்தியையறிந்த ஒவ்வொருவருக்கும் இவ்விதவிடை எதிர்பாராததன்று. அறத்தாலன்றி குணமடைய வொண்ணுத புண்ணுக்கு ஆமணக்கெண்ணெய்கொண்டு சிகிச்சை செய்வேன் என்னும், மருத்துவன்பால் சென்றவர் அடையும்பலன் வேறென்ன? இளம்பெண் ஒருவன், எழிலுடையான்; இன்பவாழ்வில் சலிக்காத நாட்டம் இன்னும் உடையாள். இவர் உலகைத்துறந்து தேசத்தொண்டு செயவேண்டுமாம். காந்தியடிகளின் புத்திமதியின் சிறப்பிருந்தவாறென்னே! இத்தகைய பதில் சாந்தகுண சிலசத்ய மிருசன்மார்க்க வாழ்விற்கு ஒவ்விய தாகவிருக்கலாம், ஆனால் அதனை போன்ற இளைஞர்களுக்கு அதிலும் இளம் பெண்மக்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்று காந்தியவர்கள் உணராது போனதற்கு நாம் மிகவும் வருந்துகின்றோம். அறபது ஆண்டு கட்குமேலாக தினந்தோறும் தன் மனத்தில் நிகழும் சச்சரவுகளையும், சந்தேகங்களையும் கடந்து அதனூற் பெறும் அறிவு, அனுபவம் என்பவற்றால் தூய வாழ்வுவாழ உணர்ந்து கொண்ட திரு காந்தியடிகள் சாதாரண மக்களுக்கு சந்திய சமூம், சமூகத்தொண்டும் போதித்தல் 'அறஞ் செயவிரும்பு' என்பதற்கு எழுத்துக் கூட்டுபவனே யாப்பிலக்கணத்திற்குப் பொருள் கூறச்சொல்லுவது போன்றதாகும். ஆகவே இத்தகைய மக்கட்கு ஒரே ஒரு உய்வழியுண்டு. அதுதான் 'விவாஹ ரத்து' இதே அபிப்பிராயத்தை லாகூர் 'பீப்பிள்' என்னும் பத்திரிகையும் முன்புகம் நாட்டில் வந்துகொண்டிருந்த 'ரிவோல்ட்' பத்திரிகையும் கொண்டன.

(தொடரும்)

பாளையங்கோட்டை முனிசிபாலிட்டி தாழ்த்தப்பட்டோர், வரிகொடுப்போர் கூட்டம்.

9-8-31ந்தேதி மாலை மாஜி முனிசிபல் கவுன்சிலர் திருவாளர் மா பெ. கசங்காத்தார் அவர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்டோர் மகாநாடு கூடி அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்.

1. பாளையங்கோட்டை முனிசிபாலிடியார் தாழ்த்தப்பட்டவர்களின் கல்விவிஷயமாக யாதொரு முயற்சியும் செய்யாமல் பாராமுகமாய் இருப்பதைப் பற்றி இக்கூட்டம் பலமாய் கண்டிக்கிறது.

2. குடி தண்ணீர் விஷயமாக குழாய், கிணறுகள் வைக்கும் படியாகவும் கிணறுகள் வெட்டும் படியாகவும் அநேக மனுக்கள் கொடுத்தும் முனிசிபாலிடியார் கவனம் செலுத்தாமலிருப்பதை இக்கூட்டம் பலமாய்க் கண்டிக்கிறது.

3. தெருக்களில் விளக்குகள் சரிவர போடாமலிருக்கிறதைப் பற்றியும் போடும்படியாக மனுக் கொடுத்தும் கண்மூடித்தனமாய் இருக்கிறதைப்பற்றியும் அப்படித் தாழ்த்தப்பட்டவர் தெருக்களில் இருக்கிற இரண்டொரு விளக்குகளுக்கு கூட உடைந்ததும் ஓட்டையுள்ளதுமான சிம்னிகளைப் போட்டு எங்களைக் கேவலப்படுத்துவதை இக்கூட்டம் பலமாய் கண்டிக்கிறது.

4. மேலப்பாளையம் கொட்டிகுளம் ஆதிதிராவிடர்கள் தெருவிற்கும் மெயின் ரோட்டிற்கும் இடையில் ஷை வரார் கேட்டுக் கொண்டதும் ஊருக்கு முக்கியமான வழிப்பாதையை குறுக்கே முஹமதியர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி காரை சுவர் கட்டி வழியை அடைத்து எங்களுடைய போக்கு வரத்துக்கு இடையூறு செய்வதை இக்கூட்டம் பலமாய் கண்டிக்கிறது.

5. தாழ்ததப்பட்டவர்களாகியங்களுக்குபாளையங்கோட்டை முனிசிபாலிடி திரு. சேர்மன் அவர்கள் மீதும் ஜாதித்துவேஷங் கொண்ட கவுன்சிலர்கள் மீதும் நம்பிக்கையில்லை யென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

6. இனிவரும் தேர்தலில் சுயகலம் கருதாமல் பொதுஜன சேவை செய்கிறவர்களுக்கே சுயமரியாதையை விரும்புகிற யாவரும் ஓட்டு கொடுக்கும் படி மகாஜனங்களை மிகவும் தாழ்மையுடன் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

7. இந்த முனிசிபாலிடியில் தோட்டிகள் தவிற சம்பளம் பெற்று உத்தியோகம் செய்கிற சகலரும் ஜாதி இந்துக்களாய் இருக்கிறதினால் அவர்கள் எங்களுடைய முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாயிருப்பதினால் கவர்ன்மெண்டார் இதில் தலையிட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

8. இந்த முனிசிபாலிடியில் எங்களுக்கேற்படும் கஷ்டநஷ்டங்களை காருண்ய கவர்ன்மெண்டார் தலையிட்டு கவனித்து நிவர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறது. இல்லையேல் தாழ்த்தப்பட்டவர் தெருக்களை முனிசிபாலிடியைவிட்டு நீக்கி விடும்படி இக்கூட்டம் கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்கிறது.

9. இக்கூட்டத்தின் தடவடிக்ஷகளை மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி இக்கூட்டத்தின் தலைவரவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

நாகப்பட்டணம் தாலூகா சுயமரியாதை மகாநாடு.

நாகை தாலூகா சுயமரியாதை மகாநாட்டில் கூத்தூர் வைக்கம் வீரர் இலவச வாசக சாலையின் முயற்சியால் நடைபெற்றுவரும் செருகல்லூர் ஆதிதிராவிட ஆரம்ப இலவச பாடசாலையின் மாணவ, மாணவிகள் சுயமரியாதைப்பாடல்கள் பாடுவார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவையில் கல்வி மந்திரி.

20-8-31ந்தேதியன்று சென்னை அரசாங்க கல்வி மந்திரி கனம் திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் கோவை ரயில்வே ஸ்டேசனில் அநேக பிரமுகர்களால் மேளவாத்தியத்துடன், பூமாலைகள் சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

காலை 9மணிக்கு அரசாங்கக் கல்லூரியில் கட்டிடத்தைத் திறந்து வைத்து கலக்டர் திரு. எஸ். எச். ஹிலேட்டர் அவர்களின் உருவப்படம் ஒன்றையும்திறந்துவைத்தார். அவ்வமயம் கல்லூரி மாணவர்களால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பகல் 3மணிக்கு கனம் மந்திரி அவர்கள் கவர்ன்மெண்டு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குச்செல்ல, அங்கும் ஓர் வரவேற்புப்பத்திரம்அவருக்குவாசித்துக் கொடுக்கப்பட்டது. மேலும், லண்டன் மிஷன் ஹைஸ்கூலில், உபாத்தியாயர்களின் சார்பாக ஓர் கல்வரவு பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

கனம் மந்திரி அவர்கள் மாலை 5-30 மணிக்கு முனிசிபல் உயர்தரப்பாடசாலைக்கு வந்து சேர, அங்கே கோவை முனிசிபல் சங்கத்தின் சார்பாக திவான்பகதூர் கி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களால் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டபின்பு, தமிழ்பண்டிதர் திரு. கி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஒரு கவிபாடி கனம் மந்திரிக்கு அளித்தார் மந்திரியவர்கள் கோவை முனிசிபாலிட்டியைப் பற்றிப் புகழ்ந்து பேசி, முனிசிபல் சங்கத்தாருக்கு வந்தனமளித்து, முனிசிபல் உயர்தரப் பள்ளிக்கூடத்தையும் திறந்து வைக்க, பள்ளிக்கூடத்தலைவர் திரு. கோவிந்தாசாரியார் அவர்களால் வந்தனமளிக்கப்பட்டு சபை இனிதகலிந்தது.

தூத்துக்குடி.
முனிசிபல் கவுன்சிலர்

திருநெல்வேலி ஜில்லா 4-வது சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவரும், பாலவனத்தம் ஆரம்பப் பாடசாலை மானேஜரும், பொதுநல சேவையில் குன்ற ஊக்கம் காட்டிவரும் பிரபல வியாபாரியுமாக உயதிரு. கூ. கா. ஆ. பெரியசாமி அவர்கள் இவ்வூர் நகரபரிபாலன சபையின் இரண்டாவது வார்டு முனிசிபல் கவுன்சிலராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பெரியகுளம் முனிசிபாலிடியும் தொழிளாளர்களின் கஷ்டமும்.

பெரியகுளம் முனிசிபாலிடியின் அங்கத்தினர்கள் இவ்வருஷம் புதிதாய் சில தொழிளாளர் மக்களுக்கு தொழில்வரி விதித்திருக்கிறார்கள். சிலருக்கு முன் வரியைக்காட்டிலும் ரூ. 1-0-0 1-8-0 அதிகம் யேற்படுத்திருக்கிறார்கள். சுமார் 1½ வருஷங்களுக்கு முன் ஷே தொழிளாளர்களில் சிலர் ரூ. 10-0-0 விருந்து 20, 22 வரை சம்பாத்தியம் செய்யக்கூடியவர்களாக இருந்திருக்கலாம். இச்சமயம் திரு. காந்தியாரின் சட்ட மறுப்பியக்கம் ஆரம்பம் செய்யப்பட்ட ஒண்ணரை வருடகாலமாக தொழிளாளர்களுக்கு தொழில் கிடைக்காமல் மாதம் 1-க்கு ரூ. 7, 8-க்கும் சம்பாதிக்க வழியில்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து கொண்டுவருவது இதன் அங்கத்தினர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் தெரிந்ததே யாகும்.

இதில் நெசவு தொழிளாளர் சிலருக்கும் தொழில்வரி யேற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவர்களுக்கு இவ்வூரில் தொழில்வரி யேற்பட்டது கிடையாது. இவ்வூர் நெசவு தொழில்களோ எப்போதும் கூஷ்ணதிசையிலிருந்தே வருகிறது. அதில் திரு. காந்தியாரின் சட்ட மறுப்பியக்கம் யேற்பட்டபின் ஷே நெசவு தொழில் அதிக கூஷ்ணதிசையடைந்து குழியில் புதைக்கப்படவேண்டிய அளவிலிருக்கிறது. இந்த நிலைமையில் வரிப்போட்டிருப்பது மிகவும் கொடுமையாகும்.

மகாநாடுகள்.

நவஜவான் பாரத சபா மகாநாடும், மாதர்கள் மகாநாடும் ஈரோட்டில் செப்டம்பர்மீ 11, 12, 13 தேதிகளில் முறையே திரு. சுபாஸ்சந்திரபோஸ் அவர்களின் தலைமையிலும், திருமதி சரளாதேவியார் அவர்களின் தலைமையிலும் நடைபெறுமென்று விளம்பர அதிகாரி தெரிவிக்கிறார்.

குண்ணத்தூர்
வாலிபர் சங்கம்.

ஷே சங்கக் காரியதரிசி திரு பி. எஸ். கந்தசுவாமி அவர்கள் தனது பதவியை ராஜீனமா செய்ததின் நிமித்தம் இவ்வூர் பிராஞ்சு சுபோஸ்டி மாஸ்டர் திரு எஸ். ஏ. நாகைய சுவாமி அவர்களை தற்காலிக காரியதரிசியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறது எனஒரு நிருபர் எழுதுகிறார்.

யார் பொருப்பாளி!
இராஜபாளையம் சர்க்கார் சங்க கிளை வஸ்திராலயத்தில் ரூ. 1400 காணும்!

(க. சங்காலிங்கம் எழுதுவது)

இராஜபாளையம் சர்க்கார் சங்க கிளை வஸ்திராலயத்தில் ரூ. 1400 பெருமான சுமார் 2500 களி கதர் நூல்கள் காணப்படவில்லை. இது விஷயம் சென்ற சில தினங்களாக இரகசியமாக மூடிவைக்கப்பட்டிருந்தாலும்கூட, தற்போது ஷே வஸ்திராலய நிர்வாகிகளோ, மானேஜரோ, சரியான காரணம் சொல்ல முடியாமலிருப்பதிலிருந்து ஷே வஸ்திராலயம் எவ்வளவு ஊழலாக நடைபெற்று வருகிறதென்பதை, பொதுஜனங்கள் இப்போது உணர்ந்து கொண்டார்கள். இவ்வூரில் கதர் வியாபாரிகள் வருடா வருடம் ரூ. 2000 க்கு குறையாமல் ஆதாயமடைந்து வந்தபொழுது, ரூ. 2000க்கு குறையாமல் நஷ்டமடைந்து ஊர் ஜனங்களும் 3 அணா துணிக்கு 12 அணா கொடுத்து வாங்கியும் வந்ததின் பரமஇரகசியமும் இப்பொழுது பொது மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. நடந்த விஷயங்கள் போகட்டும். இனி பொது ஜனங்களின் கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது. இந்த நஷ்டத்திற்கு யார் பொருப்பாளி? மானேஜரா? நிர்வாகிகளா? அல்லது காரியதரிசியா? மாதம் 400 ரூ. செலவில் 15 சிப்பந்திகளை வைத்து நிர்வாகம் செய்யும் யோக்கியஸ்தர்களா இதுதானு? ஆந்தோ! இது தானு சிக்கனம்! தரித்திர நாராயணா! நீ ஊரூராகச் சென்று பிச்சை யெடுத்துக் கொடுத்த கதர் நிதிப்பணம், எவ்வளவு ஜோக்காகப் பறக்கிறது! சர்க்கார் சங்கக் காரியதரிசியவர்களே! கிளை வஸ்திராலயத்தை இனியேனும் சரியான இடத்தில் யோக்கியமான மனிதர்களை வைத்து ஒழுங்காக நடத்துங்கள். அல்லது ஷே வஸ்திராலயத்தை உடனே காலி செய்யவும். இரண்டிலொன்று செய்யாவிடில் பொதுப்பணம் வீணாகப்போய்விடுமென்று எச்சரிக்கை செய்கின்றோம் என்று இராஜபாளையம் கதர் நெசவு தொழிளாளர் சங்கம் காரியதரிசி க. சங்காலிங்கம் எழுதுகிறார்.

தூத்துக்குடி.

சுகாதாரநாடகம்:— இவ்வூர் நகரபரிபாலனசபையாரின் ஆதரவில் நடைபெற்ற தேசிய சுகாதாரவாசக் கொண்டாட்டத்தை முன்னிட்டுச் சென்ற திங்களன்று மேலவூர் எஸ். பி. ஜி. ஸ்கூல் மாணவர்கள் சுகாதாரத்தைப் போதிக்கும் 'ஆரோக்கிய தேசம்' என்னும் நாடகமொன்றை மிகவும் நவீனமாக நடத்திக்காண்பித்தனர். சிவில் சர்ஜன் திரு எ. ஆர். ரெகாம், எம். பி. சி. எம். அவர்களின் அக்கிராசனத்தில் இவ்வைபவ விஷயமாகத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்ட ஆப்பட்டகாலேயின் தகுமை உபாத்தியாயர் உயர்திரு எ. கே. ஞானமுத்து அவர்களுடையவும் இதர ஆசிரியர்களுடையவும் நன்முயற்சி முற்றிலும் பாராட்டத்தக்கது.

சண்முகவேல் நாடார்
ஞாபகார்த்த வாசகசாலை.

காரப்பேட்டை பரிபாலன சங்கத்தின் கௌரவ காரியதரிசியும் பிரடஸிடென்சியாபாரியுமாகிய திரு கூ. கா. ஆ. பெரியசாமி அவர்களை இவ்வாசக சாலைக்குத் தலைவராக நியமனம் செய்தனர்.

ஸ்பெஷல் குஷ்டரோக ஆஸ்பத்திரி நாமக்கல், சேலம் ஜில்லா.

இவ்வூரில் ஸ்பெஷலாக குஷ்டரோக ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி 4 மாதகாலமாக ஏற்பட்டு நடந்து வருகிறது. இதை முக்கியமாக ஏற்படுத்தியவர்கள், சேலம் ஜில்லா ஹெல்த் ஆபீஸர்களுடையவும், நாமக்கல் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி டாக்டர் கனம் சுப்பையா அவர்களுடையவும் ஷே ஆஸ்பத்திரி லேடி டாக்டர்களுடையவும் அரும் பெரும் முயற்சியாலும், ஏற்படுத்தப்பட்டு நாளது வரையிலும் 350 கேசுகளுக்கு தர்மமாக இன்ஜக்ஷன் வாரந்தோறும், புதன், சனிக்கிழமையிலே 3 மணிமுதல் போடப்பட்டுவருகிறது.

இந்த வியாதியஸ்தர்களின் குறைகளை இவ்வூர் கனம் தங்கிய டிவிஸனல் ஆபீஸரவர்களும் 12-8-31-ல் வந்து பார்வையிட்டார்கள். பலர் சொஸ்தம் ஆகி வருவதாகவும் சொன்னார்கள். ஷே டாக்டருக்கு உதவிசெய்யும்படி ஏருமைப்பட்டி டாக்டர் அவர்களுக்கு, நாமக்கல் தாலூகா போர்டார் 40 ரூபாய் ஸ்பெஷல் சம்பளம் தருவதாகவும் சாங்ஷன் செய்கள்ளார்கள்.

19-8-31 தேதி புதன்கிழமையன்று, ஷே டாக்டர் கனம் சுப்பையா அவர்கள், ஷே 350 ரோகஸ்தர்களுக்கும் சைவ போஜனத்துடன் விருந்து செய்வித்தார்கள். அத்துடன் அநேக ஏழைகளுக்கும் அன்னம் அளித்தார்கள்.

நாமக்கல் தாலூகா டஞ்சாயத்து மகாநாட்டுத் தீர்மானத்தில் ஷெட்யூல்பத்திரிவை கவர்ன்மெண்டார் சாயமாக ஏற்படுத்துப்படியும், தனியாக கட்டிடம் கட்டிக்கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாமக்கல் தாலூகாவிலிருந்து சுற்றுப்பக்கங்களிலிருந்து 20 மைல் தூரங்களிலிருந்தும் வியாதியஸ்தர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். வியாதியஸ்தர்கள், வெயில், மழைக்குத் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. காருண்யம் தங்கிய கவர்ன்மெண்டார் எழைக் குஷ்டரோகிகளுக்கு கட்டிடம் ஏற்படுத்திக் கொடுப்பார்களென்று எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வியாதி முக்கியமாக தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் தான் அதிகமாக பரவியிருக்கிறது. இந்தத் தாலூகாவிலுள்ள ஹரிஜனங்களிலிருக்கும் ஆதிதிராவிடத் தெருக்களை பார்த்தால் என் இவ்வியாதி பரவாமல் விடும் என்பது தெரியவரும். கனம் தங்கிய சேலம் ஜில்லா ஹெல்த்தாபீஸரவர்கள், கிராமங்கள் தோறும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களின் சுகாதார விஷயமாய் அரும் பெரும் முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

இவ்வரும் பெரும் முயற்சிகளை ஜீவகாருண்யத்துடன் எடுத்துக்கொண்ட சேலம் ஜில்லா ஹெல்த்தாபீஸரவர்களுக்கும், நாமக்கல் டாக்டர் கனம் சுப்பையா அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிப்பதுடன் அவர்கள் குடும்பசகிதமாய் மகிழ்வுடன் நீடூழி வாழவேண்டுமென்று ஷே எழை மக்களின் சார்பாக விரும்புகிறேன்.

M. காளிசாமி.
தாழ்த்தப்பட்டவர்களின்
பொதுநல ஊழியன் நாமக்கல்.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தக் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?
இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாமபுக்கு அனுப்பப்படும். விலாசம்:—
கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு. வெ. ராமசாமியின் சிர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ... 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* மாதர் சுதந்திரம். ... 0—10—0
* ஆராய்ச்சி அணிகலம் 0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ள புத்தகங்கள் விற்பனைக்காகமைக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

தனிமனிதனின் தோழன்.

"புதுவை முரசு" மகாநாட்டு மடல்

புதுச்சேரியில் இருந்து வெளிவரும் 'புதுவை முரசு' பத்திரிகாலபத்தார் விருதுநகர் 3-வது சுயமரியாதை மகாநாட்டுக்காக வெளியிட்ட விசேஷ அனுபந்தம். தலைவர்படங்களும், வேடிக்கை சித்திரங்களும், இயக்கத் தலைவர்களாலும், அறிஞர்களாலும், பெண்மணிகளாலும் எழுதப்பட்ட பல அறிய கட்டுரைகளும், வேடிக்கை விநோதங்களும், கர்ப்பனைகளும், பாட்டுகளும், சம்பாஷணைகளும் கொண்டது. 130-பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம்.

விலை அணா 0—6—0

கிடைக்குமிடம்:—

"புதுவைமுரசு" புதுச்சேரி.

அறிவிப்பு.

பிரம்மமுடி என்பது குடும்ப, பொதுப்பெயராக உபயோகித்து வந்ததை பிரம்மமுடி வைத்தியசாலை என, பெயர் வைத்து நடத்திவருவதை, சுமார் 25 வருடங்களுக்கு முன்பே, விலகிக்கொண்ட விபக்த, சகோதரர்களும் பிரம்மமுடி வைத்தியசாலை என்னும் விளாசத்தையே வைத்து நடத்த யோசித்துவருவதாக தெரியவந்ததினால், பிரம்மமுடி என்னும் வாக்கியத்திற்கு மாற்றுப்பெயராக கோஷாயி வைத்தியசாலை என பெயரிட்டிருப்பதை சமஸ்த ஜனங்களுக்கும் இதனால் தெருவித்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர், பி. ஏ. எதிராஜ்,
(கால்நூபைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தக ரசாயனம்.

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரத்தின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் ஏன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி தெளணமாகி, (இறத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 விதவெட்டை வியாதிகள், 21 விதகிறந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மற்மஸ்தான கொருக்கு, தெணம், புத்துவலைகள், தொண்டைத்தாரு, அண்டப்புத்து, பெளத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, கூபம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவெலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிறந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதாலே சமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு ஏற்பட்டு ஜெனிக்கும் வியாதிகளை 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் கற்பகளுக்கு சுத்த இரத்தத்தை ஊட்டி முருக்கேற்றும் வல்லமை யுடைய தோழன். (உற்றி குளிர) கர்ப்ப தெளணமாலே ஆற்றக்கூடிய கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பார்சல் தபால் செலவு வேறு. மணியார்டர் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். பி. ஏ. எதிராஜ்,
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. . Naidu,
86, Ampang St

M. Ali Saiboo & Co,
27, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Booookstore,
122, Pitty street, penang.

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seraman N. S.

The Central stores
51, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி.
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

தினப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 13—8—0
மாதசந்தா 1—2—0
வெளிநாடு ,, 18—0—
6 மாதத்திற்கு 10—0—0
தனிப்பிரதி ,, 0—0—6

ஆசிரியர்: எஸ். முருகப்பா,
மானேஜர், "சண்டமாருதம்"
திருச்சிநாப்பள்ளி.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.

ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.

சாத்தூர்.

எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

கொளும்பு.

S. M. மீராமொய்தீன்,
80—பார்க் வீதி.
போர்ட் கொளும்பு

N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட். முசிரி.

எழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமாயல் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்
வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

காமரூபிலேகியம்

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், சுவாசம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்ட தாயிருந்தாலும் சரி, உடனே காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ. 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூலை தானே கரையும். கிழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமூலை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்டாலில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கொர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பலிஷ்டையாகும். கொர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கொர்ப்பம் உண்டாகும். மிக அருபலமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

உண்மை விளக்கம் பத்திரிகை அச்சிடப்பட்டு நாகமாளால வெளியிடப்பட்டது.